www.padippakam.com

290
4/5/95

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

# காகம்

**Kakam**



"பூக்களை தவறிய பூப்பனவாய்
நதியை பிரிந்த மலையெனவும்
ஊதல் இழந்த புல்லாங்குழலொப்ப
புல்லாங்குழல் தவறிய கைகளுமாய்
காற்றுத் தொலைத்த வெற்றிடமோவென
மனிதர் வாழ்வது ஆச்சின்று"

.......முல்லையூரான்

5 Maj 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அதனால்

நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

- ஒரு தாய்

## முகம்

மறந்து

மே மாதம் என்றதும் ஞாபகத்தில் வருவது; மே-1ல்வருகின்றஉலகத்தொழிலாளர்தினமாகும். தொழிலாளர்களின் உழைப்பினில் உலகம் செளித்திருக்கும்போது அதேவேளை அந்த உழைப்பாளிகளின் வாழ்வை கொடுரப்படுத்திக்கொண்டு பொருள்சார் சமூகம் தனது நலன்களை கவனத்திலெடுத்து வளம்கொளிக்கும் அதேவேளை உற்பத்தித்துறையின் விளைவுகளில் ஒரு சிறு சதவீதத்தைத்தான் உழைப்பாளிகள் பெறுவதான ஒரு துர்ப்பாக்கியநிலை ஒன்று நாம் வாழும் இந்த 20 ம் நூற்றாண்டின் இறுதிக்கோட்டிலும் தொடர்ந்துகொண்டு வருவதும், அதேவேளை அந்த தொழிளாளர் நலன்க்ள் பேணப்படாமலும் அவற்றின் இழப்புத்தன்மைகளே இன்னும் அதிகரித்தும் வருவதனைக்காணலாம். ஆனாலும் தொளிலாளர்கள் தமது நலன்களை காத்துக்கொள் அரச உத்தரவாதங்களும் இல்லாதநிலையும், சர்வதேசரீதியாக அவர்களின்நலன்களைப்பேணுவதற்கு உரிய எதிர்கால சுபிட்சங்களும் பெரியஅளவில் தோன்றாதிருக்கின்றநிலையும்தான் இன்றைய யதார்த்தமாக உள்ளது. இதில் கவலைக்குரிய விடையம் என்னவெனில் தொளிலாளர் நலன்களுக்கான அரசஅமைப்புக்களும் அவர்கள் நலன்களைபறித்தெடுக்கும்திசைநோக்கி வீழ்ச்சி அடைவதும்தான்.மேதினம் என்பது ஒரு லீவுநாளாகவோ அல்லது தொழிலாளர் தின வாழ்த்துச்செய்திகளுக்கான மூலைப்பக்கஒதுக்கலோடு இன்றைய வெகுசனத்தொடர்பு சாதனங்கள் திருப்தி அடைந்துவிடுகின்றன. சர்வதேச சூழ்நிலமைகள் இவ்வாறிருக்க புலம்பெயர்ந்து வாழும் நாம் ;



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய நாடுகளில் தொழிற்துறைசார்ந்து பாதிக்கப்படுகின்றோம் என்பதனைக்கூட இன்றைய சமூக அக்கறையாளர்கள் எனச்சொல்லிக்கொள்வோர்கவனம்செலுத்தவில்லைஎன்பதையிட்டு காகம் வருத்தப்படுகின்றது. இந்தஆசிரியதலையங்கத்தின்ஒருபின்இணைப்பாக டனிஸ் தொழிற்சாலை ஒன்றில் கண்டெடுத்ததை மொழியாக்கம் செய்து தரப்படுகின்றது.

**இணைப்பு**

**தரகுமுதலாளியும் நானும்**

நான் வேலையில் நேரமெடுத்து ஈடுபடும்போது
மெதுவாகச்செயற்படுபவன் எனப்படுகின்றேன்.
ஆனால் அவன் நேரமெடுத்துச் செயற்படும்போது
ஆழமாகச் செயற்படுபவன் எனப்படுகின்றான்.

நான் ஒரு வேலையை செய்யாவிட்டால்
சோம்பேறி எனப்படுகின்றேன்.
ஆனால் அவன் ஒருவேலையை செய்யாவிட்டால்
அவருக்கு வேலைகள் அதிகம் எனப்படுகிறார்.

உத்தரவின்றி நான் ஒரு வேலையை செய்யும்போது
என்னை நானே பிறருக்கு காட்டிக்கொள்பவனாகிறேன்.
ஆனால் அவன் அப்படி செயற்பட்டால்
அவன் முயற்சியுடன் செயற்படுபவனாகிறான்.

நான் அவனை சந்தோசப்படுத்தினால்
அது கொழுப்புத்தனமெனப்படுகிறது.
அவன் தனது முதலாளியை சந்தோசப்படுத்தினால்
அது கூட்டுவேலைமுறை எனப்படுகிறது.

நான் ஒன்றில் வெற்றி அடையும்போது
அவன் அதை ஒருபோதும் ஞாபகத்தில் வைத்திருக்கமாட்டான்.
எனக்கு அது தோல்வியாகப் போகும்போது
அவன் அதை ஒருபோதும் மறக்கமாட்டான்.

........ஒரு தொழிலாளி..............

உள்ளே.................


| பக்கம் | விடையம் |
|---|---|
| 3 | முகம் |
| 5 | H.C.Andersen கதை |
| 7 | தாய்மொழி தமிழா?. |
| 10 | நேர்காணல் |
| 11 | சிறுகதை |
| 14 | விவாதம் |
| 16 | மனதோடுபேசுதல் |
| 18 | மரணத்தின்பின்...... |
| 23 | ஆதவனின் பார்வையில் |
| 26 | இளைஞர் பக்கம் |
| 27 | தோப்புக்கரணங்கள் |
| 29 | கவிதைகள் |


**சந்தாதாரர்களுக்கு.........**

இதுவரை காகத்திற்கான சந்தாவை செலுத்தாதவர்கள் தயவுசெய்து அதனைச் செலுத்தி; காகத்தின் வளர்ச்சிக்கு உதவுங்கள். நன்றி!



படிப்பகம்

www.padippakam.com

# H.C.ANDERSENனின் கதை

தமிழில்: திரு. சி.கருணாகரன்.

## இரண்டு Claus கள்...................

அங்கே இருந்த ஆறு ஒன்றுக்கு வருவதற்கு அதிகதூரம் நடக்க வேண்டியிருந்தது. அத்தோடு சின்னக்கிளவுஸை தூக்கிக்கொண்டு செல்லுவது சுலபமான காரியமாக இருக்கவில்லை. அந்தவழி ஒருகிறிஸ்தவ ஆலயத்துக்கு அருகாமையாக அமைந்திருந்தது. அங்கே மக்கள் 'Organ' வாசித்து அழகாகப் பாடிக் கொண்டிருந்தார்கள். அதனால் பெரியகிளவுஸ் அந்த சின்னக்கிளவுஸ் உள்ள தனது சாக்கு மூட்டையை அந்த கிறிஸ்தவஆலயத்தின் கதவுக்கு அருகாமையில் வைத்தான். அவ் விடத்தை விட்டுபோவதற்கு போவதற்கு முன் உள்ளே சென்று ஒரு பாடலைக் கேட்டால் நன்றாக இருக்கும் என நினைத்தான். எல்லா மக்களும் ஆலத்துக்குள் இருப்பதனால் சின்னக்கிளவுஸினால் மூடையை அவிழ்த்துக் கொண்டு வெளியில் வரமுடியாது என நினைத்து அவன் ஆலயத்திற்குள் சென்றான்.

பெருமூச்சுவிட்டவாறு சின்னக்கிளவுஸ் அந்த சாக்கினுள் இருந்தான். அவனோ புரண்டு புரண்டு பார்த்தான். ஆனால் அவனால் சாக்கு முடிச்சை அவிழ்க்கமுடியவில்லை. அந்த நேரத்தில் நரைமுடியுடன் ஒருமேய்ப்பவன் கையில் பெரியதடியுடன் மந்தைகளை விரட்டியவாறு வந்து கொண்டிருந்தான். காளை மாடுகள் சின்னக்கிளவுஸ் இருந்த மூட்டையின் மேலால் ஓடின. அதனால் அந்த மூட்டை விழுந்தது.

சாக்கினுள் முனகியவாறே 'நான் இளமையாக இருக்கிறேன். அதற்கிடையில் சொர்கத்திற்கு போகப்போகிறேனே' என்றான் சின்னக் கிளவுஸ்.

இதைக்கேட்ட மேய்ப்பவன் "நான் ஒரு துரதிஸ்டக்காரன்; நான் மிகவும் வயதானவன்; ஆனால் இன்னும் சொர்க்கத்திற்கு போக முடியவிலலை" என்றான்.

"இந்தச் சாக்கை கழற்றிவிடு, என்னுடைய இடத்துக்கு நீ வந்துவிடு, அப்பொழுது எனக்குப் பதிலாக நீ விரைவாக சொர்க்க லோகம் போய்விடலாம்" என்று கத்தினான் சின்னக் கிளவுஸ்.

ஆம், நான் அதை மிகவும் விரும்புகின்றேன் என கூறியவாறு சின்னக்கிளவுஸை அவிழ்த்து விட்டதும் அவன் வேகமாய் பாய்ந்து எழுந்தான். "என்னுடைய மந்தைக்கூட்டத்தை நீ பராமரிப்பாயா?" எனக்கேட்ட அந்த வயதான மேய்ப்பவன் அந்தச்சாக்கினுள் ஒடுங்கிக் கொண்டான். சின்னக்கிளவுஸ் சாக்கைக் கட்டி விட்டு, அந்த பசுக்களையும், காளைகளையும் மேய்த்தவாறு தன் வழியே சென்றான்.

சிறிதுநேரத்தின் பின்பாக பெரிய கிளவுஸ் ஆலயத்துக்கு வெளியே வந்து தனது மூட்டையின் முடிச்சில் பிடித்து தூக்கியபோது அது இலகுவாக இருப்பதாக நினைத்தான். அந்தவயதான மேய்ப்பவன் சின்னக்கிளவுஸ்சை விட அரைவாசி நலிந்தவானாக காணப்பட்டான். 'தூக்கிச்செல்வதற்கு அவன் எவ்வளவு இலகுவாக காணப்படுகிறான்! ஆம், அதுசரி, ஏன்என்றால் நான் ஒரு சங்கீதப்பாட்டை கேட்டிருந்தேன்' இவ்வாறு நினைத்துக் கொண்டு ஆற்றையடைந்தான். ஆழமாகவும் பெரிதாகவும் இருந்த அந்தத் தண்ணீரில் அந்த வயதான மேய்ப்பவனை எறிந்து, அந்த சாக்கினுள் இருந்தது சின்னக் கிளவுஸ்தான் எனநினைத்து 'பார், இனிமேல் நீ என்னை ஏமாற்றமுடியாது' என கத்தினான் பெரிய கிளவுஸ். வீட்டைநோக்கி நடக்கும்போது ஒரு சந்தியில் சின்னக்கிளவுசை சந்தித்தான். அவன் தனது மந்தைகளை விரட்டிக்கொண்டு போய்க் கொண்டிருந்தான்.

"இது என்ன இது, நான் உன்னை மூழ்கடிக்கவில்லையா" என்று கேட்டான். "ஓம் நீ என்னை அந்த ஆற்றினுள் அரை மணித்தியாலத்திற்கு முன்பு எறிந்தாய்" என்றான் சின்னக் கிளவுஸ்.

"அதெல்லாம் சரி எங்கேயிருந்து அழகான இந்த மந்தைக்கூட்டத்தை பெற்றாய்" என்று கேட்டான் பெரிய கிளவுஸ்.

"இது கடல்மந்தைகள் நான் உனக்கு அந்த



படிப்பகம்

www.padippakam.com

முழுக்கதையையும் சொல்லுகிறேன், அத்தோடு உனக்கு நன்றி சொல்லுகிறேன், ஏன்என்றால் நீ என்னை மூழ்கடித்தாய், அதனால்தான் நான் பணக்காரனாக உயர்ந்தநிலையில் இருக்கிறேன். உன்னால் நம்பமுடியுமா! நான் சாக்கினுள் இருந்தபோது மிகவும் பயந்தவனாய் இருந்தேன். அந்த பாலத்திற்கு கீழாக நீ என்னை அந்த குளிரான தண்ணீரில் எறிந்தபோது காற்று என் காதோரமாக இரைந்தது. நான் நேராக ஆற்றின் அடித்தளத்திற்கே சென்றுவிட்டேன். அங்கே அழகான மெதுமையான புற்தரைகள் வளர்ந்து இருந்ததால் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. நான் அந்தப்புல்லில் விழுந்ததும் அந்த சாக்குகட்டு அவிழ்ந்தது வெள்ளாடை தரித்த, பச்சை நிறமான மாலையை அந்த நனைந்த தலையில் அணிந்தவண்ணமாய், ஒரு அழகான கன்னிப்பெண் என் கையைப் பிடித்து கிளவுஸ்! நீ இங்கேயா இருக்கிறாய்! ஒரு மைலுக்கு அப்பாலே ஒரு இடத்தில் கால் நடைகள் இருக்கின்றன அவற்றை நான் உனக்கு பரிசாகத் தருவேன் என்றாள்.அந்த ஆறு, அந்தக் கடல் மோகினிகளுக்கு ஒரு பெரிய வழியாக இருந்தது. அவர்கள் கடலின் அடித்தளத்திலிருந்து ஆற்றின் முடிவுவரை வந்து போகிறார்கள், பறவைகள் காற்றில் பறப்பதுபோல் அந்தமீன்கள் நீந்திய வண்ணம் என் காதோரம் வந்தது. அழகான பூக்களும், பசும்புற்களும் மேலும் அழகு கூட்டியது. அங்கேயிருந்த மக்கள் மிகவும் நல்லவர்களாக இருந்தார்கள். மேட்டிலும் பள்ளத்திலும் கால்நடைகள் போய்க் கொண்டிருந்தன" என்றான் சின்னக் கிளவுஸ்.

"ஆனால், ஏன் நீ விரைவாகவே திரும்பி வந்துவிட்டாய்?" என்று கேட்டான் பெரிய கிளவுஸ்

"அந்த சந்தோசமான இடத்தை விட்டுவிட்டு வந்திருக்கமாட்டேன், என்னுடைய தந்திரக் குணம் என்னை வரவைத்து விட்டது. நான் சொல்வதை நீ கேட்கிறாய்தானே; கடல்கன்னி ஒரு மைலுக்கு அப்பால் எனக்கூறியது அந்த ஆற்றைத்தான் என்பது எனக்குத் தெரியும். ஆனால் தூரவழியால் நான் செல்லாமல் குறுகிய பாதைமூலமாக அந்த இடத்திற்கு விரைவாக நான் வந்தேன் என்றான் சின்னக் கிளவுஸ்.

"ஆகா! நீ எவ்வளவு அதிஸ்டக்காரன், நானும் அந்த ஆற்றின் அடித்தளத்திற்கு வரும்போது எனக்கும் கடல் மந்தைகள் கிடைக்கும் என்று நினைக்கிறாயா?" என்று கேட்டான் பெரிய கிளவுஸ்.

"ஆம் நான் நினைக்கிறேன் உனக்கும் கிடைக்குமென்று, ஆனால் என்னால் உன்னைத் தூக்கிக்கொண்டு அந்த ஆறுவரை செல்ல முடியாது. நீ மிகவும் பாரமாக இருப்பாய், நீயாகவே நடந்து சென்று அந்த சாக்கினுள் நுழைந்து இருந்தால் நான் மிகுந்த சந்தோசத்தோடு உன்னை தூக்கி அந்த ஆற்றுள் எறிவேன்" என்றான் சின்னக் கிளவுஸ்

"மிக்க நன்றி, ஆனால் நான் ஆற்றின் அடியில் போகும்போது கடல் மந்தைகள் கிடைக்காவிட்டால் நான் உனக்கு அடிப்பேன். இதை நீ மறக்காதே" என்றான் பெரிய கிளவுஸ்.

"அப்படி நடக்கக் கூடாது" என்றவாறு ஆற்றை நோக்கி விரைந்தார்கள். அந்த மந்தைகள் தாகமாக இருந்ததால் தண்ணீரை கண்டவுடன் குடிப்பதற்காக ஆற்றை நோக்கி ஓடின.

"பார் மந்தைகள் எவ்வளவு வேகமாக ஆற்றுக்குள் இறங்குகின்றன, ஏன்னென்றால் கனகாலத்திற்கு பிறகு மீண்டும் அவை ஆற்றின் அடியில் போக விரும்புகின்றன" என்றான் சின்னக் கிளவுஸ்.

"ஆமாம்!, முதலில் நீ எனக்கு உதவிசெய், இல்லாவிட்டால் அடிவாங்குவாய்" என்றான் பெரியகிளவுஸ். ஒரு காளைமாட்டின் முதுகில் குறுக்காகபோடப்பட்டிருந்த சாக்கை எடுத்து, அதனுள் புகுந்துகொண்டு "நான் அடித் தளத்திற்கு செல்லமாட்டேனோ என்று பயமாக இருப்பதனால் ஒரு கல்லையும் இதற்குள் என்னுடன் வை" என்றான் பெரிய கிளவுஸ்.

அவ்வாறே ஒருபெரிய கல்லையும் அவனுடன் சேர்த்து நன்றாக இறுக முடிச்சுப்போட்டு "எல்லாம் நன்றாக அமையும்" எனக்கூறி காயப்படும்படியாக "தொப்"என தூக்கிப்போட்டதில் பெரிய கிளவுஸ் ஆற்றின் அடித்தளத் திற்கு விரைவாகவே சென்று விட்டான்.

"அவனுக்கு மந்தைகள் கிடைக்குமோ!" என்று பயமாக இருக்கிறது என கூறியவாறு சின்னக் கிளவுஸ் தன்னுடைய மந்தைகளை விரட்டியவாறு வீடு போய்ச் சேர்ந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்மொழி தமிழா?

க. இலங்காதிலகம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஒரு தமிழ் தாயின் வயிற்றில் ஒரு குழந்தை இருக்கும்போது அது அம்மாவின் குரல்கேட்டு, தன் உணர்வைக்காட்ட உதைக்கின்றது; கேட்டு துடிக்கிறது. பிறந்து தாயின் அரவணைப்பில் இருக்கும்போது, அம்மா ஊட்டும் தாய்ப்பாலோடு, "என் கண்ணே, மணியே, முத்தே" என்று அம்மாவின் குரலைக்கேட்டு, கையைக்காலை ஆட்டுகின்றது. குரல்வரும் திசையைப் பார்க்கிறது. பின்னர் தாயின் முகம் பார்த்துச் சிரிக்கின்றது. ஒரு வயதுப்பிள்ளை வாயைத் திறந்து ..ம்மா.....ப்பா... என்றும் சொல்லுகின்றது. "வாடா... கண்ணா!" என்றால் ஓடிவருகின்றது. ஒரு பொருளை தொடாதே என்று தாய் மிரட்டினால், தொடாமல் நிற்கின்றது. ஆனால் மீண்டும் தொடுகின்றது. தன் சுதந்திரவுணர்வை செயலில் காட்டுகின்றது. 3வயதில் தன்மழலைத் தமிழ்வசனங்களைப் பேசி தன் உணர்வுகளை வெளிக்காட்டுகின்றது. அம்மாவோ, அப்பாவோ அல்லது பிள்ளையைப் பராமரிக்கக்கூடியவர் வீட்டில் இருக்கும் மட்டுமே, இப்படி நடைபெறுகின்றது. இல்லையேல் மோதத்திலேயே பிள்ளையைப் பாலர்நிலையத்தில் சேர்க்கவேண்டிய நிலை ஏற்படும். இங்குதான்– பாலர்நிலையத்தில் தான் தாய்மொழி மாற்றமடைந்து, புலம்பெயர்ந்த நாட்டுமொழி தாய்மொழியாக செயற்பட ஆரம்பிக்கிறது. கிட்டத்தட்ட, பகலில் 7–8 மணித்தியாலங்கள் பிள்ளையின் சுறுசுறுப்பான பொழுது பாலர் நிலையத்தில் கழிகின்றது.

இங்கு பிள்ளை, பல பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுகின்றது; ஆடுகின்றது; பாடுகின்றது; அழுகின்றது; சிரிக்கின்றது; சண்டையிடுகின்றது; பல்வகை உணவுகளை உண்ணுகின்றது. அதன் திறமைகள், ஆற்றல்கள் படிப்படியாகச் செயற்படுகின்றது; தூண்ட.....ஊக்குவிக்கப்படுகின்றது. நிலையபொறுப்பாளர்களால் "நான்", "என்னால் முடியும்" என்ற உணர்வுகள் ஊட்டப்படுகின்றது. வெளியே அழைத்துச் செல்லப்பட்டு தன்னைச் சுற்றியுள்ள சூழல்களை, இயற்கைகளை, கால மாற்றங்களை அறிய வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது. பிள்ளை சுதந்திரவுணர்வை, ஏன் நாளடைவில் தீர்மானிக்கின்ற உணர்வையும் அடைகின்றது. ஒரு 'சின்ன மனிதனாக' பிள்ளை அங்கு உருவாக்கப் படுகின்றது.

இத்தனை உணர்வுகளையும் இந்தப்பிள்ளை எந்தமொழியில் பெற்றது? எந்த மொழியில் இந்த உணர்வுகளை அந்தப்பிள்ளை வெளிக்காட்டப்போகின்றது? புலம்பெயர்ந்த நாட்டு மொழியில் தானே! தாலாட்டும்போதும், உணவூட்டும்போதும் தூங்கும்போதும், பிள்ளைக்கு ஊட்டிய தாயின் மொழியானது இங்கு தூரத்துப் பச்சையாக மாறுகின்றது... மாறிக்கொண்டு வருகின்றது.

டெனிஷ் குடும்பம் ஒன்று இலங்கையில் உள்ள 3வயதுச் சிங்களப்பிள்ளையை அல்லது கொரியாவில் உள்ள 3வயதுப் பிள்ளையை தத்தெடுத்து, டென்மார்க்கில் அந்தப்பிள்ளை வாழ்கின்றது என்றால் அந்தப் பிள்ளையின் தாய்மொழி எது? டெனிஷ்மொழிதான். சிலர் இல்லையென்று வாதிக்கலாம். ஆனால் உண்மையானதும், நியாயமானதும் அப்பிள்ளையின் தாய்மொழி டெனிஷ்மொழி என்பதே. காட்டில் வளர்ந்த டார்சனின் மொழி.... மிருகங்களின், பறவைகளின் ஒலி தானே.

அகதிகளாக வந்தோம்; தஞ்சம் கொடுத்தார்கள்; மகிழ்ந்தோம். வாழ்க்கைப் பயணம் பிறப்பு, இறப்பு என்று புதியமண்ணில் தொடர்கின்றது. பலர் பிரஜா உரிமையும் பெற்றுள்ளார்கள். இன்னும் பலர் எதிர்பார்ப்பில் உள்ளனர். இவையெல்லாம் ஒருபுறம் இருக்க தஞ்சம் புகுந்தநாடோ நம் வருங்காலச் சந்ததியை தத்தெடுத்துக் கொண்டிருக்கின்றது.

"பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதுமா? பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா?....."

புலம்பெயர்ந்த நாடு பிள்ளையை பேணிக்காக்க தொடங்கிவிட்டது. நான்



படிப்பகம்

www.padippakam.com

பெற்றபிள்ளை, “நான் அடித்துத்தான் திருத்துவேன்“ என்ற வாதம் இங்கு செல்லாக்காசாகிவிட்டது. பாலர் வகுப்பிலிருந்து, பல்கலைவரை(உயர்கல்வி) கல்வியில சமமானவாய்ப்புக்கள் அநேகமாக எல்லாப் புலம்பெயர்ந்த நாடுகளிலும் கிடைக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் பிள்ளையானது தன்னை எல்லாவழிகளிலும் ஈடுபடுத்திக்கொள்கிறது. சிநேகிதம், விளையாட்டு, படிப்பு, பல கலைகள் ஆகிய துறைகளில் ஈடுபடுத்துவதின் காரணமாக தன் ஆற்றலை, திறமையை, குறிக்கோளை, வாய்ப்பை அபிவிருத்தி செய்துகொள்கின்றது; திறமைசாலியாகின்றது; தனித்துவத்தை அடைகின்றது. இவை அனைத்தையும் இந்தப்பிள்ளை எந்த மொழியில் பெற்றுக்கொண்டது?

சித்திர உணர்வு :- கடல்
சிந்தனை உணர்வு :- கடலைப் பற்றியது
கற்பனை உணர்வு :- கடலில் படகு ஓட்டுவது

இத்தனை உணர்வுகளையும் இந்தப்பிள்ளை எந்த மொழியில் பிரளயமாக ஓடவிடப் போகிறது? தூரத்தே பச்சையாக - அல்லது சுற்றி சுற்றி வருகிற கடற்கரை வெளிச்சவீட்டு ஒளியை போல அப்பப்போ கேட்ட மொழியிலா? இல்லவே இல்லை. சுவாசிக்கின்ற காற்றைப் போன்ற, இடம்பெயர்ந்த நாட்டு மொழியிலேதான்.

ஒரு மொழியை பேசுகின்ற தொனி, அந்த மொழியை கையாளுகின்ற வல்லமை, அந்த மொழியை ஆட்சிப்படுத்துகின்ற ஆற்றல் - இவைகளினால் அறிவுபெருகி அந்தப்பிள்ளை சந்தர்ப்பங்கள், வாய்ப்புக்கள் கிடைக்கும்போது பல ஆக்கங்களை, படைப்புக்களை, கண்டுபிடிப்புகளை உருவாக்குகின்றது. புலம்பெயர்ந்தநாட்டில் இவை இனைத்தும் எந்த மொழியினால் ஈடேறுகின்றது. இடம் பெயர்ந்த நாட்டு மொழியிலல்லாது வேற்று மொழியிலா? சிலர் கூறுகின்றனர் இதை முதல்மொழி என்றும், இரண்டாவதாகக் கற்றாலும் தமிழ் மொழிதான் தாய்மொழி என்றும். பிள்ளையின் முதல் மொழி தாய்மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்பது மொழிவல்லுனர்களின் ஆய்ந்துரைவு. அப்படியானால் இங்கு பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குகின்ற, புலம்பெயர்ந்த நாட்டு மொழி தாய்மொழிதானே?

இதை ஏற்றுக் கொள்ள எனக்கும் கஷ்டமாக, கசப்பாகத்தான் இருக்கிறது.

- தமிழினத்திற்கு இது வாழையடிவாழையாக வந்த சாபம் என்று ஏற்றுக்கொண்டு வாழாது இருப்பதா?
- பிள்ளைக்கு இரண்டுமொழியை, கலாச்சாரத்தை போதிப்பதினால் அது குழந்தையை குழப்பத்தில் ஆழ்த்தும், இப்படியே இருந்துட்டுப் போட்டும் என்றுவிட்டு விடுவதா?
- ஐய்யோ.. என்ரை பிள்ளை டனிஸ்தான் கதைக்குது தமிழ் கதைக்குதில்லையே என்பதா?
- நாட்டுக்கு போகும்போது இதைப்பற்றி யோசிப்போம் என்று ஒத்திப்போடுவதா?
- பிள்ளைகள் விடுதலைக்கு ஜொ்மன், கனடா, பாரீஸ், சுவிஸ், லண்டன் போய் சொந்தக்காரர்களின், சிநேகிதர்களின் பிள்ளைகளுடன் பேசி விளையாடி எப்படியோ உறவாடி வருகிறார்கள் தானே எனக் கூறி நிம்மதியடைவதா?
- உதைப்பற்றிப் பேசி உம்மையும் எங்களையும் ஏன் குளப்புகிறீா் என்று உதறித்தள்ளுவதா?
- எப்படியோ போகட்டும் நடப்பது நடக்கட்டும் என தலையில் கை வைப்பதா?
- உதைவிட்டிட்டு பிள்ளைக்கு நாலு இங்கிலீசு சொல்லிக்கொடுங்கள் பின்னடிக்காலும் உதவும் உங்களுக்கும் புண்ணியமாகும் என்பதா?

இவைகட்கு நாம் ஒரு தீர்வு காண வேண்டாமா? இடம்பெயர்ந்த நாட்டில் முதல் பட்சமான அந்த நாட்டுமொழி சூழலைத்தவிர, இரண்டாம் பட்சமான தமிழ்ச் சூழலாவது உண்டா? ஏன் இல்லை தைப்பொங்கல், புதுவருடம் சரஸ்வதி பூசை தீபாவளி என்று விழாக்கள் கொண்டாடுகின்றோம்.(பொதுவாகக் கூறப்போனால் இவையெல்லாம் பெரியவர்களின் தாகங்கள், ஏக்கங்கள், இழப்புக்களை நிவர்த்தி செய்யவே நிகழ்கின்றதாக தெரிகின்றது) பிள்ளைகட்கு தமிழை படிப்பிக்கின்றோம்; சங்கீதம், நாட்டியம் ஆகிய கலைகளைப்



படிப்பகம்

www.padippakam.com

பழக்குகின்றோம்; இந்துக்கோயிலையும் உருவாக்கியுள்ளோம். உண்மைதான் ஆனால் விழாக்களில் குழந்தைகள் நேரடியாக எத்தனைவீதம் கலந்து கொள்கிறார்கள். அதாவது குழந்தைகள் பங்குபற்றும் நிகழ்ச்சிகள் எத்தனை வீதம்? பார்வையாளர்களாக வந்துவிட்டு போகும் குழந்தைகள் எத்தனை வீதம்? பங்குபற்றுபவர்களின் வீதம் மிகமிகக் குறைவே. இங்கு வளர்ச்சியைக் காணவில்லை, பதிலாக பல விழாக்கள் இப்போ நடப்பதில்லை. ஆரம்பத்தில் இருந்த அக்கறையும், ஆர்வமும் குறைந்துவிட்டது. பெற்றோர்களுக்கிடையே பல பல காரணங்களால் ஏற்பட்ட விரிசல்களே காரணம். டென்மார்க்கில் சில பாடசாலைகளில் தமிழைக் கிழமைக்கு 2மணிநேரம் போதிக்கின்றார்கள். பங்குபற்றுகின்றவர்களின் வீதமோ 39 ஏனைய பிள்ளைகளுக்கு 61வீதமானோருக்கு ஆர்வமில்லை. (ஆய்வு மதிப்பீடு: திரு. முல்லையூரான், வெளியீடு சஞ்சீவி மலர் 24. 93 ஆடி–ஆவணி)

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்" இதை முன்னோர்கள் சொன்னார்கள், கல்வியைக் கருத்தில் கொண்டு. இங்கே செந்தமிழுக்கு நாப்பழக்கம் வேண்டும். இதற் கு தேவையெல்லாம் வார இறுதியில் அரைநாள் (வெள்ளி, சனி அல்லது ஞாயிறு) 3 அல்லது 4 மணிநேரம் ஒரு தமிழ்சூழல் ஊதியமற்ற சேவை மனப்பான் மை.

பெரும் குழுக்களாக சேரமுடியாவிடில் சிறு குழுக்களாக–10,15 குழந்தைகளுடன் பெற்றோரும் சேர்ந்து ஈடுபடவேண்டும். தமிழைப் படிக்கின்ற வசதியற்ற இடமாகில் தமிழ் மொழியை படிப்பியுங்கள். தமிழில் சமய (இந்து–கிறிஸ்தவம்) வழிபாட்டை நடத்துங்கள். பஜனை, தேவாரம் முதலியவற்றைப் பாடும்போது பிள்ளையும் பாடும். பிறகு பிள்ளை சொல்லிக் கொடுக்க நீங்களும் பாடுங்கள். சிலருக்கு சமயத்தில் நம்பிக்கையில்லாதிருக்கலாம். ஆனால் அது தமிழ்மொழியை வளர்க்கும் ஒரு மாபெரும் சாதனம், இடம் பெயர்ந்த நாட்டில். தமிழ்க்கதைகளைக் கூறுங்கள், பிள்ளைகளையும் கதைகளை சொல்லும்படி தூண்டுங்கள். (இந்து–கிறிஸ்தவ சமயநூல்களில் ஏராளமான கதைகள் உண்டு.) தமிழர்களில் உணவுவகைகளை, சிற்றுண்டிகளை பிள்ளைகட்கு சாப்பிட, செய்ய கற்றுக்கொடுத்து உண்டு மகிழுங்கள். இன்னும் என்னென்ன நன்மையானவைகளைச் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் தமிழில் பேசி செய்யுங்கள்.

அநேகமான தமிழ் பிள்ளைகட்கு தமிழ் தெரியும் (தூரத்துப் பச்சை), அவர்களுக்கு விளக்கமுண்டு, அவர்களிடம் இருப்பதெல்லாம் நம்பிக்கையீனம்– தான் பிழையாக பேசிவிடுவேனோ, இது சரியோ, தன் உணர்வுகளின் பிரதிபலிப்பை நன்றாக தமிழில் சொல்லி வெளிக்காட்ட முடியுமோ என்ற குழப்பம். இவைகளெல்லாம் இடம் பெயர்ந்த நாட்டு மொழியாலேதான் செய்யமுடியும், கூறமுடியும் என்று அவர்கள் நம்புவதாலேயே இந்தத் தயக்கம். இந்த தயக்கத்தை, குழப்பத்தை, நம்பிக்கையீனத்தைப்போக்க, நீறுபூத்த நெருப்பாக இருக்கும் அவர்களின் தமிழ்ஆற்றலை வெளிக்கொண்டு வரவேண்டும். பிள்ளைகள் தமிழில் பேசவேண்டும். பெற்றோர்கள் வாரஇறுதியில் அரைநாளை பிள்ளைகளுக்காக ஒதுக்கல் வேண்டும், ஒரு தமிழ் சூழ்நிலையை (சூழலை) உருவாக்க வேண்டும்.

"...10 பேரைத்தேடி ஒரு சீட்டை நம்மால் பிடிக்க முடியுமாயின் ஏன் இது முடியாது?..."

பிள்ளைகளிடம் திறமை இருக்கிறது, ஆற்றல் இருக்கிறது. அவர்களுக்கு தேவையானது சந்தர்ப்பம், வாய்ப்பு, வசதி. இவைகளை பெற்றோர்கள் ஏற்படுத்திக்கொடுத்தால்– 'பெற்றோர்களிடம் ஊக்கமில்லை – என்ற சொல்லுக்கு இடமில்லாமல் போகாதா?

'தமிழ்'தான் தாய்மொழி என்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளாமல் விடுவேனா?

திருக்குறள்:– 'எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்'


(எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும், கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்–மு.வ)

பயன்பட்டநூல்:– தமிழின் வடிவங்கள் – புலவர் செந்துறைமுத்து.



படிப்பகம்

www.padippakam.com



# நேரில் கதைத்தது.....காகம்

.....................டென்மார்க் அகதிமுகாமில் வசிக்கும் ஓவியர் திரு. பாலச்சந்திரன் அவர்களுடனான ஒரு உரையாடல்..........................................................................................................................................

**"எங்கிருந்தென்றாலும் நீங்கள் என்னிடம் வாருங்கள்.**
**நான் களைப்படைந்தவர்களுக்கும்**
**பாரங்களைச்சுமப்பவர்களுக்கும்**
**ஓய்வைத்தருவேன் "**............................................................... என்கின்ற வாசகங்களுடன் ஓவியர் பாலாவினால் உருப்பெற்ற யேசுநாதர் சிலுவையில் மரணித்துக்கிடக்கும் காட்சியை பார்த்தபடி அவருடன் வணக்கம் சொல்லிக்கொள்கிறேன்.

கட்டிலும் போர்வையுமாக தலைமாட்டில் இருக்கும் தொலைக்காட்சிப்பெட்டியுமாக எதிர்ப்புறத்தில் இரண்டுபேர் படுப்பதற்கான கட்டில்களுடன் கூடிய அந்த அறை.

காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கிலான படங்களும், சோகத்தில் தலைமோதும் பெண் உருவங்களுமான அவரது அண்மைக்கால ஓவியங்களைப் பார்த்தபடி; அவர் தனது மனைவியைப்பற்றியும், அவர்பிரிந்து வந்துள்ள தனது அழகிய பெண்குழந்தைகள் பற்றியும் சொல்வதை கேட்டுக்கொண்டிருக்கிறேன். பாதைதெரியாத ஒரு நம்பிக்கையோடு ஒன்றரை வருடங்களாக தனிமையில் வாழும் ஒரு 34 வயது மதிக்கத்தக்க அந்த ஈழவரோடு மனம்வைத்துக்கேட்டுக் கொண்டிருக்கிறேன்.அகதிமுகாம் வாழ்வு என்பது கடினமானதல்ல ஆனால் மிகக்கடினமானதொன்று என்று டனிஸ் மக்களால் விதந்துரைக்கப்படும் வாழ்வை இவர் கடந்து வருவதற்கு எத்தனை காலம் இப்படியான படங்களைக்கீறிக்கொண்டே வாழவேண்டுமோ? அது யாருக்கும் தெரியாது.யேசுவைப்பற்றி பேச்சைத்திருப்புகின்றேன்......பதில் சரளமாக வருகிறது......"எனக்கு வணங்குவதற்கு ஒரு உருவம் வேண்டும். அது எதுவாகவும் இருக்கலாம்" என்ற அவருக்கு இன்று தேவைப்படும் அந்தவெற்றிடத்தை எங்கென்று காட்டுவதறியாது சும்மா இருக்கிறேன். ஏலவே அகதியாக அங்கீகரிக்கப்பட்டவர்களாகிய நாம் இவர்களுடைய வெற்றிடங்களை நிறைவுசெய்ய என்னசெய்யலாம் எனக்கேட்டபோது......"திரும்பவும் யுத்த பயங்கரத்துள் தள்ளப்பட்டுவிடுவேனோ" என எனக்குள்ள பயத்தை உங்களால் போக்கமுடியாவிட்டாலும்; என்னைத் தெருவில் காணும் நீங்கள் என்னைப்பார்த்து சிரித்துவிட்டாவது போங்கள் என்ற ஓவியரிடமிருந்து அவர் வரைந்துமுடிக்காத அந்த புல்லாங்குழல் இல்லாத கண்ணனை காகத்தின் அட்டைப்படத்திற்காக பெற்றுக்கொண்டு குறுக்கேஓடும் அந்த யூகோஸ்லாவியக்குழந்தையை விலக்கிக்கொண்டு வெளியே வருகிறேன். ஆனால் எனது மனம் முகாமிலேயே நின்றுவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# அப்பா

சிறுகதை

*ஈழத்துத் தமிழ்ப்பாட நூல்களில் தமிழரின் உண்மைக் குடும்பநிலை, வாழ்க்கை முறை பற்றிய நடைமுறை அம்சங்கள் சேர்க்கப்படுவது மிகவும் குறைவாகும். டெனிஷ் பாடப்புத்தகமொன்றில் 5ம் வகுப்பு மாணவர்களுக்கான வாசிப்புபயிற்சிக்கு சேர்க்கப்பட்ட கதையொன்றின் நேரடியான மொழிபெயர்ப்பு இது. இது 5ம் வகுப்பு மாணவி செல்வி. V.சுபாஜினியால் (12வயது Allingåbro ) இக்கதையின் பெரும்பகுதி மொழிபெயர்க்கப்பட்டது.*

- ரவி -

றோலான்ட்ஸ் அப்பாவும், அம்மாவும் திருமணம் செய்துகொள்ளவில்லை. அவனின் அப்பா வேறு ஒரு நகரத்தில் வசிக்கின்றார்.

றோலான்ட்ஸ் சிறுவனாக இருந்த போது அவனின் அம்மாவுடன் பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்துக்கு செல்லுவான். கொஞ்சம் பெரியவனான போது தனியாகவே செல்லத் தொடங்கினான்.

அவன் எல்லா விடயங்களிலும் மற்றய பிள்ளைகளைவிட ஆரம்பத்திலேயே ஈடுபாடு காட்டத் தொடங்கினான். நாலு வயதினிலேயே உள்ளூர்ப் புகையிரதத்திலோ அல்லது பஸ் வண்டியிலோ தனியாகப் பயணஞ்செய்தான்; ஐந்துவயதிலே தொலைபேசியை உபயோகிக்க, கடைக்கு,வைத்தியரிடம் செல்ல தொடங்கினான்; அவன் அம்மா சிலவேளைகளில் வீட்டுக்கு தாமதமாக வந்தால் அவனே உணவுக்காக மேசையை ஒழுங்குசெய்தான்; உருளைக்கிழங்கு சீவுதல்போன்ற சிறியவேலைகளையும் தானே செய்யத் தொடங்கினான்.

அந்தநேரங்களில் அவன் தனது அப்பாவைப் பற்றி அதிகமாக நினைக்கவில்லை. தனது அப்பா வேறு ஒரு நகரத்தில் வசிப்பதும் அவர் சிலவேளைகளில் தனது பிறந்தநாளுக்கோ, நத்தாருக்கோ பார்சல் அனுப்புவது அவனுக்குத் தெரியும்.

பார்சல்கள் ஒவ்வொருமுறையும் வருவதென்றும் இல்லை. அப்படியான சந்தர்ப்பங்களில் அம்மா "அவருக்கு நினைவு இல்லை, அதைப்பற்றிக் கவலைப் படாதே" என்பார். "அவருக்கு என் நினைவும் இல்லை; அவருக்குத்தான் என்னைத் தெரியாதே" என்பான் றொலான்ட்ஸ்.

றொலான்ட்ஸ் பாடசாலைக்குப் போகத் தொடங்கினான். அங்கே மற்றய பிள்ளைகள் தங்கள் அப்பாவினைப்பற்றி, அவரின் வேலை, ஓய்வுநேரத்தில் என்ன செய்வார் என்பதுபற்றி, அப்பாவுடன் என்ன விளையாடினார்கள் வார விடுமுறைக்கு எங்கே போனார்கள் என்பதுபற்றி எல்லாம் கதைத்தார்கள்.

றோலான்ட்ஸ்க்கு தனது அம்மாவைப்பற்றி சொல்ல முடிந்தது. அம்மாவிற்கு வேலை இருந்தது; கோடைக்காலத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் அவனுடன் படகில் பிரயாணம்; படகில் செல்லுவது அம்மாவின் பிடித்தமான ஓய்வுநேரம்; இவைகள் அம்மாவைப் பற்றி சொல்லுவதற்கு போதுமானதாக இருந்தது.

ஆனால் தனது அப்பாவைப் பற்றி றோலான்ட்ஸ்க்கு கொஞ்சமே தெரிந்திருந்து. தனது வகுப்பில் படிக்கும் பெண் பிள்ளைகளில் ஒருத்தி எப்போதும் அப்பாவைப் பற்றி கேட்பது மிகவும் கஷ்டமாக இருந்தது.

"உனக்கு ஒரு அப்பா இருக்கிறாரா?" என்று அவள் கேட்டாள்.

"அவர் வேறு இடத்தில் வசிக்கிறார்," என்றான் றோலான்ட்ஸ்.

"ஆனால் உனக்கு அவரைத் தெரியாது."

"ஓம், அவர் எனக்கு பார்சல் அனுப்புகின்றவர்."

"உனது அம்மாவிற்கு பணம் அனுப்புகின்றவரா?"

"எனக்கு அதுபற்றித் தெரியாது. எனது அம்மா தானே உழைக்கின்றார். எனவே அதற்கு ஒரு மனிதன் தேவையில்லை" என்றான் றோலான்ட்ஸ்.

"உனது அம்மாவிற்கு ஒருவரும் இல்லைத்தானே," என்றவள் தொடர்ந்து "எனது அம்மா சொன்னார் உனது அம்மாவும் அப்பாவும்



படிப்பகம்

www.padippakam.com

திருமணம் செய்துகொள்ளவில்லையென்று" என்று முடித்தாள்.

"இல்லை, அவர்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை" என்றான் றோலான்ட்ஸ்.

அப்படியே வீட்டுக்கு வந்தவன் அம்மாவிடம் கேட்டான் "ஏன், நீங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை?"

அம்மா சொன்னார் "நாங்கள் இருவரும் ஒன்றாக இருந்தபோது திருமணம் செய்வதாகத்தான் நினைத்திருந்தோம். ஆனால் எங்களுக்குள் பிரச்சனைகள் தொடங்கி காலம் செல்லச்செல்ல கூடிக்கொண்டே போனது. ஒரே சண்டையும் சச்சரவுமானபோது நாங்கள் இருவரும் திருமணம் செய்வதில்லையென்று தீர்மானித்தோம். நாங்கள் இருவரும், அதாவது நீயும்நானும் நல்ல முறையில் சந்தோசமாக இருக்கிறோம். அப்படி யில்லையா?"

"ஆம் ஆம்" என்றான் றோலான்ட்ஸ். பின்பு கேட்டான் "அப்பா அடுத்தவீட்டு லெக்மான் போன்று உயரமானவரா அல்லது அவரைவிட உயரமானவரா?"

"அவர் அதிக உயரமுள்ளவர் அல்ல. சாதாரண உயரமுள்ளவர்தான்" என்றார் அம்மா.

"ஏன் நான் அவரிடம் ஒருமுறை சென்றுவரக் கூடாது? நீங்கள் அவருக்கு நாங்கள் ஒரு முறை அங்கே வருவதாக எழுதுங்கள்" என்றான் றோலான்ட்ஸ்.

"எனக்கு இது சரியாகப்படவில்லை" என்றார் அம்மா.

ஆனால் றோலான்ட்ஸ் அவனின் அப்பாவிடம் செல்லவேண்டும் என்பதில் மிகவும் பிடிவாதமாக இருந்தான். அம்மா கடிதம் எழுதும்வரை அவன் அவரை அமைதியாக இருக்கவிடவில்லை.

கோடைகால விடுமுறையின்போது அவர்கள் ஒருநாள் புகையிரத்தில் அப்பாவிருக்கும் நகரத்தை அடைந்தனர். அவர் அவர்களை புகையிரதநிலையத்தில் இருந்து அழைத்துச் செல்வதாக இருந்தது. ஆனால் அவர் குறிப்பிட்ட நேரத்துக்கு வராதபடியால் காத்திருக்க வேண்டியிருந்தது.

"அவர் எங்களைப்பற்றி அக்கறையே இல்லாதவர்" என்றபடி அம்மா சிரித்தாள். ஆனால் றோலான்ட்ஸ் கவலையுடன் "அவருக்கு நாங்கள் வருவது மகிழ்ச்சியாக இருக்குமென்று நான் நினைக்க வில்லை" என்றான்.

இறுதியில் அப்பா வந்து சேர்ந்தார். அவர் நல்லவர் போல் இருந்தாலும் அதை அவர் வெளிக்காட்ட தயங்குவதை றோலான்ட்ஸ் உணர்ந்தான்.

புகையிரதநிலையத்துக்கு வெளியே நிறுத்தப்பட்ட அவரின் காரில் அவர்கள் மிருகக்காட்சிச் சாலைக்கு சென்றனர். அம்மா மட்டும் ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தார். அவைகள் காலநிலை பற்றியும், தன்னுடைய வேலைபற்றியதும், வேறுயாராவது பற்றியதுமாக றோலான்ட்ஸ்க்கு புரியாத விடயங்களாக இருந்தது. அப்பா "ம்", "ஆம்" என்று மட்டும் சொன்னார்.

றோலான்ட்ஸ் நினைத்தான்: "அவர் அம்மா சொல்லுவது ஒன்றையும் கேட்கவில்லை. அவர் வேறு எதையோபற்றி யோசனை செய்து கொண்டிருக்கிறார்".

ஆனால் மிருக்காட்சிசாலையில் அவன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நடுவில் நடந்தான். அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இது வரையிலும் அப்பா பெரிதாக ஒன்றும் கதைக்க வில்லை. அவர் நுழை வாசலில் வாங்கிய ஒரு புத்தகத்தை மிருகங்களை பார்வையிடும்போது உரத்து வாசித்துக் காட்டினார். அது மிருகங்களைப் பற்றியதாக இருந்தது.

றோலான்ட்ஸ் நினைத்தான்: "அவருக்கு வாசித்துக் காட்டுவதென்றால் மிகவும் விருப்பம்" என்று நினைத்தான்.

அவர்கள் மிருகக்காட்சிச்சாலையில் உள்ள உணவுச்சாலையில் பொரித்தகோழி சாப்பிட்டார்கள். றோலான்ட்ஸ் தேவையானளவு சோடா குடித்தான்.

அப்பாவிற்கு நேரெதிராக இருந்ததால் அப்பாவை நன்றாகப் பார்க்க கூடியதாக இருந்தது. அவர் சாப்பிடுவது எப்படி?, குடிப்பது எப்படி?, கதைப்பது எப்படி? என்பவற்றை நன்றாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அவன் நினைத்தான்: மற்றய பிள்ளைகள் இப்படித்தான் அவர்களின் அப்பாவோடு மேசையில் எப்போதும் இருப்பார்கள், இன்று நான் அப்படி அப்பாவுடன் மேசையில் இருக்கின்றேன். நான் அவரை முழுதாக பார்க்கின்றேன், ஆகவே இதை நான் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருப்பேன்.

ஆனால் அவன் "அப்பாவிற்கு இப்பொழுது எங்களுடன் மீண்டும் என்ன கதைப்பதென்று புரியவில்லை. சிலவேளைகளில் அவர் நாங்கள் விரைவாக போய்விட வேண்டும் என்று விரும்புகிறாரோ" என்றும் நினைத்துக் கொண்டான்.



படிப்பகம்

www.padippakam.com

சாப்பாட்டுக்குப் பின் அவன் ஐஸ்கிறீம் சாப்பிடுவதாக இருந்தது. ஆனால் றோலான்ட்ஸ் திடீரென வெளியே ஓடிச்சென்று புற்தரையில் சத்தியெடுத்தான். அவனுக்கு பின் அம்மாவும் அப்பாவும் ஓடிச் சென்றனர். அம்மா நெற்றியில் கைகளால் பிடித்தபடி அவனின் வாயைத் துடைத்தார். அப்பா மிகவும் பயந்து போயிருந்தார்.

"எல்லாம் அளவுக்கு மிஞ்சிய சோடா குடித்தத யல் தான்" என்றார் அப்பா.

றோலான்ட்ஸ்க்கு உடனேயே புகையிரநிலையம் சென்று வீட்டுக்கு திரும்பவேண்டும் என்று விரும்பினான்.

"நீங்கள் இன்னும் கொஞ்சநேரம் இருந்துவிட்டு கடைசிப் புகையிரதத்தில் செல்லலாம்" என்று அப்பா கூறினார்.

றோலான்ட்ஸை அம்மா பார்த்தார். அவன் இடதுகண்களால் அவளுக்கு சமிக்கை செய்தான். அம்மாவிற்குத் தெரியும் அதன் கருத்து. அவர் சொன்னார் "இல்லை, அப்படியென்றால் நாங்கள் வீட்டுக்குச்செல்ல பிந்தி விடும்".

புகையிரதநிலையத்தில் அப்பா அவனுக்கு ஏதாவது வாங்கித்தர விரும்பினார். றோலான்ட்ஸ்க்கோ அவர் தனக்கு என்ன வாங்கித்தர வேண்டும் என்று தெரியவில்லை.

அப்பா ஒரு பேனையும், ஒரு எழுதும் பேப்பர் கட்டும், ஒரு புத்தகமும், சீப்பு வைக்கும் தோல்பையும் வாங்கிக்கொடுத்தார்.

அவர்கள் இருவரும் புகையிரத்துள் இருக்கையில் யன்னல் அருகில் அமர்ந்து கொள்ள அப்பா வெளியில் யன்னல் அருகில் புகையிரமேடையில் நின்றார். இப்பொழுது அவர் குடும்பத்தில் இருந்து பிரிக்கப்பட்டு வேறு ஒரு மனிதனாக தெரிந்தார்.

அவர் மிருகக்காட்சிச்சாலையில் வாங்கிய மிருகங்கள் பற்றிய புத்தகத்தைக் அவனிடம் கொடுத்தார். "இதை கொண்டுசெல், ஏனென்றால் எப்படியோ நாங்கள் அங்கே ஒன்றாக இருந்திருக்கிறோம்" என்று சொன்னார்.

"இதை நான் பாடசாலையில் மற்றவர்களுக்கு காட்டுவேன்" என்றான் றோலான்ட்ஸ்.

புகையிரதம் புறப்பட்டது. அவர்களும் கை காட்டினார்கள்; அப்பாவும் கைகாட்டினார்; அப்பா கண்ணில் தெரியும்வரை.

றோலான்ட்ஸ் அம்மாவிடம் "நான் நினைக்கிறேன்; எப்படியோ அவருக்கு என்னில் விருப்பம்; அவர் மிருகக்காட்சிச் சாலைப் புத்தகத்தைத் தரும்போது உணர்ந்தேன்; என்னைப் பொறுத்தவரை அவர் நல்லவர்தான்" என்றான்.

"நான் அவரைத் திருமணம் செய்து கொள்ளுவது உனக்கு விருப்பமா?" அம்மா கேட்டார்.

"அவர் எப்படியோ ஒரு வேறு மனிதர். நீங்கள் ஏன் அவரை திருமணம் செய்து கொள்ள வேண்டும்? நாங்கள் மீண்டும் ஒருதடவை அவரிடம் செல்லுவோம்" என்றான்.

■

# எங்கே?!!!!

இலையுதிர் காலம்
இருட்டாக உள்ளது
சுற்றும் முற்றும் பார்க்கிறேன்
யாரையும் காணவில்லை
சொந்தம் எங்கே?
சிநேகிதர் எங்கே?
வீடு எங்கே? வாசல் எங்கே?
ஓடி ஓடி பார்க்கிறேன்
தேடி தேடிப் பார்க்கிறேன்

எங்கே? எங்கே?
போய்விட்டார்களா? அல்லது
மறைந்து விட்டார்களா?
சூரியபகவான் உதிக்கமாட்டாரா?
போனவர்கள் திரும்பி வரமாட்டார்களா?
என்னை தேடமாட்டார்களா?
அவர்களிடம் போய் சேரமாட்டேனா?
கடவுளே! ஓ! கடவுளே!

செல்வி. மேனகா - நியூபோக்



படிப்பகம்

www.padippakam.com

கூட்டுக்குடும்பமுறை பிரச்சனைக்குரியதா?

# விவாதம் ?

திருமதி. ஆ. மல்லீஸ்வரி

ஏதாவதொரு வித்தியாசத்தைக் கண்டவுடன் அதில் மனம் இலயிப்பது மனித இயல்பு. மூன்றுக்கு மேற்பட்டதலைமுறையினர் சேர்ந்து வாழும் கூட்டுக்குடும்ப முறையைக் கண்ட எமக்கு இப்புகலிட வாழ்வு தனிக்குடும்பமுறையென்னும் ஒரு வித்தியாசத்தை காட்டிக்கொடுத்துவிட்டது. அன்பு, பாசம், தியாகம் போன்ற பல உன்னதமான கருத்துக்களால் கட்டி எழுப்பப்பட்ட கூட்டுக்குடும்பமுறையானது இன்று சர்ச்சைக்குரியதாக மாறிவருகிறது. அதுவும் குறிப்பாக புலம்பெயர்ந்தோர் வாழ்க்கையில் இது ஒரு பெரிய பிரச்சினையாக தோன்றியுள்ளது. இதற்கு என்ன காரணம் என சற்று ஆழ்ந்து சிந்தித்தால் சில உண்மைகள் புலப்படும்.

பெற்றோர் பிள்ளைகளை மதித்து நடந்திருந்தால்.......

பிள்ளைகள் பெற்றோரின் உணர்வுகளை மதித்து நடந்திருந்தால் .....

மாமி மருமக்கள் அல்லது மாமன் மருமக்கள் அன்பாக நடந்திருந்தால்.....

இப்படி எல்லாமே நடந்திருந்தால் கூட்டுக்குடும்பமுறையைப்போல் ஒரு சிறந்த குடும்பமுறை இல்லையென்றே கூறியிருக்கலாம்.ஆனால் நடந்தது, நடக்கிறது, நடக்கப்போவது என்ன?

ஒருவரை ஒருவர் கடித்துத்தின்னுமளவுக்கு சீர்கெட்டநிலையிலேயே கூட்டுக்குடும்பமுறை இயங்குகிறது. எம்கலாச்சாரக்குறியீடுகளில் முக்கியமான ஒன்றான இக்குடும்பமுறையில் ஒருபெண்ணின், ஒரு குடும்பத்தலைவியின் பங்கு என்ன என்பதை சிந்தித்தால் இச்சீர்கேட்டிற்கு முக்கியகாரணம் விளங்குமென நான் நினைக்கிறேன்.

எமது ஆணாதிக்க சமூகக்கட்டுக்கோப்பில் பெண்ணிடமிருந்தே பெண்ணின் சுதந்திரத்தைதவிர எல்லாமே எதிர்பார்க்கப்படுகின்றன. தமிழ்சினிமாக்களில் வருவதுபோன்று பூவையும் பொட்டையும் பாதுகாக்க எவ்வளவோ ஒரு பெண் செய்யவேண்டியுள்ளாள். அன்பு, பொறுமை, தியாகம், விட்டுக்கொடுத்தல் போன்ற பலவற்றை காக்கவேண்டியவளாக ஒருபெண்ணே இருக்கிறாள். ஒரு கூட்டுக்குடும்பத்தில் குடும்பத்தலைவியின் நிலைமை முள்ளின்மேல் நடப்பதைப்போன்றது. அவள் தன்னிலையிலிருந்து சிறிது பிசகினாலும் அவளை ஏறிமிதித்து ஒதுக்கியே விட்டுவிடுவார்கள். இப்படி ஒருபெண்மீது முழுப்பாரத்தையும் சுமத்தி நடக்கும் கூட்டுக்குடும்பமுறையானது பிரச்சினைக்குரியதாகும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. மருமக்களிடமிருந்து மாமியார் மாமனார் எதிர்பார்ப்பு ......மனைவியிடமிருந்து கணவனின் எதிர்பார்ப்பு ...இப்படியே குடும்பம் என்ற நாடக அரங்கில் பெண் என்ற பாத்திரத்தின் நடிப்பு எல்லையற்று நீடித்துக்கொண்டே போகிறது. பெண்ணிலைவாதம், பெண்ணுரிமை என பெண் பற்றிய பலகருத்துக்கள் தீவிரமாகப்பேசப்படும் இக்காலத்தில் ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணானவள் தன்னைப்பற்றிச்சிந்திக்க வேண்டியவளாக இருக்கிறாள்.அந்தச்சிந்தனையின் மீறலும் கூட்டுக்குடும்பமுறை பிரச்சனையாவதற்கு காரணமாக அமையும் என நான் உறுதியாக நம்புகின்றேன். பெண்ணின்மேல் முழுப்பழியும்போடும் இக்குடும்பமுறை மாற்றப்படவேண்டும்.

இது ஒருபுறமிருக்க மறுபுறம் வயது வந்தோர் ஒருகூட்டுக்குடும்பத்தில் வகிக்கும் பங்கு என்பதும் பிரச்சினைக்குரியதாக உள்ளது. திருமணம் முடித்துக்கொடுத்தவுடன் தம்கடமை முடிந்துவிட்டதாக பெற்றோர் இருப்பதில்லை. அதாவது பிள்ளைகளின் இன்பதுன்பங்களில் பங்குகொண்டு அவர்களுக்குத்தேவையான ஆலோசனைகளை வழங்குபவர்களாக, அவர்களுக்கு உதவிதேவையானபோது உதவுபவர்களாகவும் எத்தனை பெற்றோர் இருக்கிறார்கள் ? மாறாக



படிப்பகம்

www.padippakam.com

பெற்ற பாசம் என்ற போர்வையில் பிள்ளைகளின் எல்லாவிடையங்களிலும் தலையிடுவதும், பிள்ளைகளே; " தம் பெற்றார் பெரிய தலையிடி" யென நினைக்குமளவுக்கு எரிச்சலைக்கொடுப்பதும் உண்மை.சரி பிள்ளைகள் எப்படி நடந்துகொள்கிறார்கள்?

மிதமிஞ்சிய சுதந்திரவேட்கையினால் உந்தப்பட்ட பிள்ளைகள் தம்பெற்றார் எதைச்சொன்னாலும் எந்த நல்லநோக்கத்துடன் சொன்னாலும் தங்கள் "பிரைவசி"யில் (Privacy) இக்கிழடுகள் தலையிடுகுது கள் என்றல்லவா நினைக்கின்றார்கள். இப்படி இருசாராரும் தத்தம் உரிமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும், கடமைக்காகவும் போலித்தனமான அன்பையும் பாசத்தையும் பொழிந்துகொண்டு அதேநேரம் மனதுக்குள் புழுங்கிக்கொண்டும் வாழ்கிறார்கள்.

கூட்டுக்குடும்பமுறையில் இப்படித்தான் வாழவேண்டும் என்ற எம் சமூகநிர்ப்பந்தத்தி னால் வாழும் **இந்த சீர்கெட்டவாழ்வு தேவைதானா?**

■

.............................இந்த இதழில் மல்லீஸ்வரியின் கருத்துக்களில் கூட்டுக்குடும்பம் பற்றியவை களையே இங்கு தரப்பட்டிருக்கிறது. ஏழாவது இதழில் இவரின் இக்கருத்துக்கழுக்கெதிரான கருத்துக்களும், தனிக்குடும்பம் பற்றிய மல்லீஸ்வரியின் கருத்துக்களும் இடம்பெறும். விவாதக்கட்டுரைகள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது..............காகம்..................

■

**இரத்தவங்கியாய்......................கவிஞர் பாரதிபாலன்.......**

சொந்த நாட்டில் எம் சுதந்திரம் போனது
சூழ்ந்து வாட்டிடும் துயர்களங் கானது
இந்தியா இன்று எட்டி உதைக்குது
இந்த நாடுகள் தஞ்சம் கொடுக்குது—இங்கு
வந்த எங்களின் வாழ்க்கைதாம் எப்படி?
வன்முறைகளாம் சண்டையாம் இப்படி
சந்து பொந்தெலாம் சொல்வது கேட்குது
புவிச்சரிதம் தமிழரை சண்டியர் ஆக்குது!
முன்பு தோன்றிய மூத்த குடிகள் நாம்!
மூன்று வேந்தரால் அன்றுநாம் ஆண்டதாம்!
அன்பு என்பதே எங்களுக் கில்லையாம்!
அடிக்கடி எம்முள் படையெடுப் பாகுமாம்
பின்பு மன்னரெம் ஆட்சிகள் போனதாம்!
பிரிந்த முத்தமிழ் ஒருதமிழ் ஆனதாம்!—இருந்தும்
தொன்று தொட்டஅத்தோசங்கள் போனதா?
சோழ பாண்டிய நெஞ்சு பொறுக்குமா?

–•–

கந்தன் ரத்தமோ "ஏ" குறூப்பானதாம்!
காளி ரத்தமோ "பி" குறூப் ஆனதாம்
எந்தன் இரத்தமோ "ஓ" குறூப் ஆனதால்
இரத்த வங்கியாய் ஐக்கியம் பாடுவோம்!
சந்தனத் தமிழ் தென்றலாய் வீசுவோம்!
சாதிச் சாக்கடை வாடையை மூடுவோம்
சிந்தை எங்கணும் சமரசம் ஊட்டுவோம்!—நீர்
சீறி வந்திடில் எம்கன்னம் காட்டுவோம்!

காந்தி அன்றொரு யேசுவாய் மாறினார்—தன்
கன்னம் காட்டினார் வெள்ளையன் ஓடினான்.
ஏந்தி அவ்வழி ஈழத்துக் காந்தியும்
எங்கள் வாழ்வினுக்(கு)அகிம்சையைக்காட்டினார்.
சாந்தி வந்ததா புத்தரின் நாட்டிலே?
சரித்திரங்களோ கறைகளாய்ப் போனது.
வாந்தி கொண்டந்த புத்தரும் ஓடினார்—பெரும்
வன்முறைகளை பிக்குதான் பாடினார்.

–•–

இக்கணம் இதை எதற்குநீர் பாடணும்?
இந்த நாட்டிலே டிஸ்கோதான் ஆடணும்!
பக்க வீட்டுடன் பகைமைதான் வளரணும்.
பருப்பு வேகுமுன் உப்புதான் போடணும்!
ஐக்கியத்தை நீர் எப்படிப் பாடுவீர்?
யாருக்(கு) ஒற்றுமை இங்குநீர் காட்டுறீர்?
அக்கம் பக்கமா அகதிஎம் சொந்தமா?
அவை கலைந்ததும் அவரவர் வேறுதான்!
என்ற கூக்குரல் எம்செவி கேட்குது!
இடையில் இரண்டொரு செந்தமிழ் கேட்குது.
நன்று நன்றுஎம் செந்தமிழ் வேந்தரே
நாமும் இங்குஏன் ஒற்றுமை பாடணும்!
ஒன்று சொல்கிறோம் எம்முயிர்போக்கிடும்! அங்கும்
உதிரம் பொங்கிஉம் ஒற்றுமை பாடிடும்!
மன்றில் நீங்களோ கவரியாம் மானினம்!—உங்கள்
மயிரை ஒட்டுமாம் இங்குஎம் பாவினம்.




படிப்பகம்

www.padippakam.com

## மனதோடு பேசுதல் — செல்வன்
(தொடர்: 5)

ஊர் அடங்கியிருந்தது
இருட்டு போர்வையுள்....

வாசற்கதவில்
பார்வை பதிய
படுத்திருந்தவாறு – உன் வரவை
எதிர்பார்த்து காத்திருக்கிறேன்.



நத்தை வேகத்தில்
நகர்ந்து நகர்ந்து
நேரம்
நடுநிசியையும் அழைத்து
வந்துவிட்டது.

ம்.....
நீ இன்னும் வந்த பாடில்லை.
............

நீ வருவாய்
என்ற நம்பிக்கைகள்
மெல்ல மெல்ல முகம் மாறி
சந்தேகங்களாக
மனமெங்கும் சஞ்சரிக்கின்றன.

நீ
முன்னர் போல இல்லை.
இப்பொழுது – மிகவும்
விலை வைக்கத்தலைப்பட்டு
விட்டாய்.

முன்னர்
ஒரு காலத்தில்
ஒரு தலைப்பட்சமாக– என்னை
நீ காதலித்து வந்திருக்கிறாய்.

நான் அழைக்காமலேயே
எனை தேடி வந்து
ஆசையுடன்
அணைத்துக் கொண்டிருக்கிறாய்.

இரவு என்று இல்லை
பகல் என்று இல்லை
கால நேரம் இல்லாமல்
வலிய வந்து விருந்து தந்திருக்கிறாய்.

மடியில் வைத்து– அம்மா
கதைகள் சொல்லும் வேளைகளில்
பாதி அளவிலேயே– எந்தன்
கவனத்தினை கவர்ந்து
சென்றிருக்கிறாய்.

கல்விக்காலங்களில்
பாடத்துடன் மனம் ஒன்றி
படித்துக் கொண்டிருக்கும்
பொழுதுகளில்
எத்தனை தடவைகள்
நீ தடையாக வந்திருக்கிறாய்.

பாடசாலைகளில்
படம் காட்டுவது போல்
விதம் விதமாய்
எத்தனை காட்சிகளை
இலவசமாக வழங்கியிருக்கிறாய்.

மாபெரும் சபைகளில்
நாணம் இல்லாமல்
நாகரீகம் தெரியாமல்
என் கண்களைத்தழுவி
எத்தனை தரங்கள்தான்
என்னை தலைகுனிய
வைத்திருக்கிறாய்.

பகைவர்களின் நடுவினிலும்



படிப்பகம்

www.padippakam.com

துவக்குகளின் காவலிலும்
அச்சங்களின் சூழலிலும்– என்னை
உன் வசப்படுத்தி இருக்கிறாய்.

அன்று வந்த இரவுகளில்
இனிமையான நேரங்களில்
என்னவளுடன்
போட்டி போட்டுக்கொண்டு– நீயும்
என்னுடன் கூட வந்திருக்கிறாய்.

இப்போது மட்டும்
என்னை இங்கு தவிக்க விட்டு
தள்ளியிருந்து– ஏன்
வேடிக்கை பார்க்கிறாய்?.

விழித்து விழித்து
என் விழிகள்– மிகவும்
களைத்துப் போய் விட்டன.

இங்கு வரும்
இரவுப் பொழுதுகளில்
எவ்வளவு நேரம் தான்– உனக்காக
நான் தனிமையில் காத்திருப்பது?

கடந்தவற்றை
வரிசைப்படுத்தி வரிசைப்படுத்தி
எத்தனை முறைகள் தான்
நான் கவலைப்பட்டுக் கொண்டிருப்பது?

## பிழை . . !

உதெல்லாம்
முழுப் பிழை . !
ஓடி ஓடிக்
கத்துறன் :
ஒரு சனமும்
கேக்குதில்லை !
எனக்கும் :
நேற்றுத்தான்
தெரியும் . !
நான் செத்து
ரெண்டு நாள் .

— சன்னதமாடி.

## தமிழின்நிலை

மதி

ஒரு தமிழ்சஞ்சிகைக்காக வாசகர் சிலரை நாடினேன். நீங்கள் தமிழ் சஞ்சிகைகள் படிக்கும் பழக்கமுள்ளவரா? உங்களுக்கு தமிழ் இலக்கிங்களில் ஈடுபாடுண்டா?

"ஆமாம் எனக்கு நிறைய ஆர்வமுண்டு. நான் நிறைய வாசிக்கின்றவள் என்றார் நண்பி ஒருவர். சரி நல்லவிசயம். உரிய நபரைத்தான் நான் நாடியிருக்கிறேன் என்ற பூரிப்போடு அவரிடம் விடயத்தைச் சொன்னேன்.

"ஐயோ! எனக்கு ஏதாவது சினிமாப்புத்தகங்கள் இருந்தாத் தாங்கோ.மற்றும்படி எங்கட ஆக்கள் எழுதிற புத்தகங்கள் எனக்கு வேண்டாம். அது எனக்குப் பிடிக்காது. குறை நினைக்காதை." என்றார்.

"இல்லை இதில் என்ன குறை இருக்கு நான் வாறன்" என்று விடைபெற்று வெளியே வர முத்துலிங்கண்ணா ஞாபகத்துக்கு வந்தார். அவர் தமிழில் ஆர்வமுள்ளவர்.தமிழ் பற்றி மேடைகளில் பேசுபவர். அவர் கண்டிப்பாக எடுப்பார் என்று எண்ணி அவரிடம் போனேன்.

"நாட்டுப்புதினம் ஏதாவது அறிந்நீரோ? என்னமாதிரி எங்கட சங்கம் எல்லாம் எப்படி என்றார்." என்னண்ண நாட்டுப்பிரச்சனை அப்படியே இருக்கு.......சங்கம் செத்துப்போச்சு நான் இப்ப ஒரு சஞ்சிகை பற்றி கதைக்க வந்தனான்" என்றேன்.

புத்தகத்தை உங்கட பிள்ளையளும் பாப்பினம்...அவையளுக்கும் எங்கட தமிழ் இலக்கிய நாட்டம் வரப்பண்ண இது நல்லதொரு சந்தர்ப்பம் என்ன சொல்லுகின்றீர்கள்" எனக்கேட்டேன்.

"தம்பி நல்லவிசயம்தான்.......ஆனால் எனக்கு உதுகள்ள இப்ப நாட்டம் இல்லை.பிள்ளையள் இரண்டும் பள்ளிக்கூடம். இனி நான் உந்த புத்தகங்களை காட்டி அதுகளின்ர டனிஸ் படிப்ப குளப்பக்கூடாது.நான் பிள்ளையளை தமிழ் வகுப்புக்கே விடுறதில்ல.....

காரணம்: இரண்டையும் கலந்து அதில என்ன இருக்கு.? இது அவர்.

நீங்கள் திடமா நம்பிறியளோ...இந்த நாடு எங்களுக்கு நிரந்தரமென்று..? இங்கை எங்களை அனுப்பமாட்டாங்கள்.நாங்களா போறம் என்று சொல்ல வைப்பாங்கள்....என்று சொல்லாமலே நான் வந்துவிட்டேன்.

■



படிப்பகம்

www.padippakam.com

# மரணத்தின் பின்..!

கே. எஸ். துரை.

மரணத்தின் பின் என்ன ? என்பதை அறிந்து கொள்வதைப் போன்ற சுவையான செய்தி மனிதர்களுக்கு வேறெதுவுமே இருக்கமுடியாது. இந்த வினாவிற்கு மட்டும் விடை கிடைத்து விட்டால் மனிதர்கள் தம்மைச் சூழ்ந்துள்ள சகல சங்கடங்களிலிருந்தும் துணிச்சலுடன் விடுதலை பெற்றுக்கொள்ள முடியும். போர் மூடிய இந்த உலகில் ஆனந்தமிழந்திருக்கும் மனிதனுக்கு அதைவிட உவப்பான செய்தி வேறெதுவுமே இருக்க முடியாது. " இந்த உலகம் உங்களுடையதுதான். உங்களுடைய இலட்சியங்களினால், பேராசையால், பொருளாதாரப் பாதிப்பினால், உலகப் போர்களினால், நீங்கள் உருவாக்கி வைத்திருக்கும் உலகம்தான் இது ! " என்று இன்றுள்ள உலகத்திற்கு சுருக்கமான வரைவிலக்கணம் கொடுத்தார் ஒரு கீழைத்தேய ஞானி. தனது நின்மதிக்காகவும், ஆனந்தத்திற்காகவும், இதுவரை மனிதன் புவிமீது எத்தனையோ ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்த போதிலும் ; அவன் எதிர்பார்க்கும் அமைதியையோ, சாந்தியையோ, இன்றுவரை அவனால் பூரணமாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. மரணத்திற்கு முற்பட்ட மனிதவாழ்வின் கடுமைத் தன்மையைக் குறைக்கும் வல்லமை இவைக்கே உண்டு என நம்பப்பட்ட பிரசித்தமான கோட்பாடுகள் முக்கியமிழந்து கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில், " மரணத்தின் பின் என்ன ? " என்ற சுவையான தேடலுக்குள் மனிதவர்க்கம் மிகத் தீவிரமாக உதைக்கப்பட்டிருப்பது தெரிகிறது.

ஸ்ரீலங்காவில் நடைபெற்ற 1983 யூலைக் கலவரங்களைப் போல, சென்ற ஆண்டு ருவாண்டா என்னும் ஆபிரிக்க நாட்டில் ஓரிருவாரங்களில் பத்து இலட்சம் மக்கள் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். இன்றும் தொடர்ந்துவரும் இப்படுகொலைகள் மனிதப் பாதுகாப்பிற்கு விடுக்கப்பட்டுள்ள மகத்தான சவாலாகும். ஐ . நா . தாபனமோ ? அல்லது வல்லரசுகளோ ? அல்லது வேறெந்த உலகக் கட்டமைப்புக்களோ இனியும் மனித குலத்தின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்க முடியுமா ? என்பது ருவாண்டா படுகொலைகளின் பின் பெரும் கேள்விக்குறியாகிவிட்டது. ஏழ்மையால் இரத்தத்தை விற்பனை செய்யப் போனவர்களிடம் அவர்களுக்குத் தெரியாமலே அவர்களது சிறுநீர்ப் பைகளைத் திருடி ஏற்றுமதி செய்து வந்திருக்கிறார்கள் சில வைத்தியர்கள். இது பெங்களூரில் நடைபெற்றிருக்கிறது. போதைவஸ்துக் கடத்தலை முந்திக் கொண்டு, அணுக்கரு மூலப் பொருட்களே இன்றைய சர்வதேசக் கடத்தல் முதற் பொருட்களாகிவிட்டன. இப்படியான பாரதூரமான நெருக்கடிகளை ஏந்தி, அணுஆயுதப் போருக்கும் தயார் நிலையில் நிற்கும் இன்றைய உலகத்திற்கு, "மரணத்திற்கு அஞ்சாதவர்களே உயிர்வாழத் தகுதியுடையவர்கள் ! " என்ற மெக்ஆதரின் பழமொழியே மிகப் பொருத்தமுடையதாகத் தெரிகிறது. இத்தகைய நெருக்கடிகளால் பலமாக அழுத்தப்படும் மனிதர்கள் தமக்கு மரணத்தின் பின்னாவது மகிழ்வுண்டா ? எனத்தேடுவது இயற்கையே.

ஆகையால்தான் மரணத்தின் பின் என்ன நடக்குமென்ற ஆராட்சிகள் முன்னெப்போதும் இல்லாதவாறு, இப்பொழுது தீவிரம் பெற்றுள்ளன. இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தகவல்



படிப்பகம்

www.padippakam.com

களை ஆராட்சியாளர் ஒன்றுதிரட்டியுள்ளனர். இவைகள் மூலம் பெறப்பட்ட விடைகள் அனைத்துமே ஏறத்தாழ ஒரேவிதமாகவே உள்ளன. இறந்து ஒருசில நிமிடங்களின் பின் மறுபடியும் பிழைத்துக் கொண்டவர்கள் தாம் சந்தித்துக் கொண்ட அனுபவங்களின் தொகுப்பே இவை. இதுபற்றி அமெரிக்காவைச் சேர்ந்த வைத்தியரான ரேமன் மோடி என்பவர் எழுதிய, " வாழ்வின் பின்பு ஒரு வாழ்வு! " என்ற நூல் இப்பொழுது விற்பனையில் பல மில்லியன்களை மிக வேகமாகத் தாண்டிவிட்டமை இவ் ஆர்வத்தின் தீவிரத் தன்மையைக் காட்டுகிறது. இதில் உள்ள தகவல்களின்படி இறந்தவுடன் ஒருவர் தன்வாழ்க்கையிலிருந்து, விடுவிக்கப்படுவார். அதன்பின் அவர் ஓர் இருண்ட சுரங்கத்தால் மிகவேகமாக அழைத்துச் செல்லப்படுவார். இருட்சுரங்கத்தின் முடிவில் ஓர் அமைதியான ஆனந்தமான பேரொளி, "பக் . ! " கெனத் தோன்றி, அவரை அன்புடன் அணைத்துக் கொள்கிறது. இங்கே இறந்துபோன நண்பர்களையும், குடும்ப உறவினர்களையும், பலர் சந்தித்துள்ளனர். இனிய இசையொன்று தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்ததென்றும், அவ்விடம் மிகவும் செந்தளிப்பாக இருந்ததென்றும், சிலர் குறிப்பிட்டுள்ளனர். இந்த ஆதாரங்களிடையே காணப்படும் தொடர்புத்தன்மையானது இன்றைய அறிவுலகத்தை இதுபற்றித் தீவிரமாகச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

ஜோன் றிச்சார்ட்சன் என்னும் ஆங்கிலப் பெண்மணி இருதய சிகிச்சையின் போது, மரணத்தை ஒருசில நிமிடங்கள் அனுபவித்திருக்கிறார். இவர் உயிர்தப்பி நிஜ வாழ்கைக்குத் திரும்பியதும் தான் கண்ட செய்தியைப் பின்வருமாறு எடுத்துரைத்தார். " நான் மரணத்தை அனுபவித்திருக்கிறேன். மரணம் ஒரு பயமுறுத்தலோ அல்லது அமைதியற்றதாகவோ இருக்கவில்லை. அது மிக அழகாகவும், அமைதியாகவும் இருந்தது. நான் உயிர் வாழ விரும்புகிறேன். ஆயினும் நான் இறக்கப்போகும் அந்நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன் ! " என்று கூறினார். இதுபோல இறந்து பிழைத்த வேறொருவர் அறையில் மிதந்தபடியே தனது உடலையும், அதைச்சுற்றிப் பல மனிதர்கள் நிற்பதையும் பார்த்திருக்கிறார். இறுதியாக தான் ஓர் இருண்ட சுரங்க வழியாக, வெண்மையான அன்பு நிறைந்த ஒளியை நோக்கிக் கொண்டு செல்லப் பட்டதாகவும் கூறுகின்றார். இவ்விதம் உயிர் தப்பியவர்களை ஓர் உயர்ந்த சக்தி, " உங்கள் இறப்பிற்கு இப்பொழுது காலம் வரவில்லையென்று " கூறித் திருப்பி அனுப்பி வைத்ததாகவும் விபரித்துள்ளார். இறந்தவுடன் போகும் வழியைவிட, திரும்பும் வழி மிகவும் சுருக்கமாகவும்; திடீரென்று நடைபெறுவதாகவும் தெரிகிறது. மேற்கண்ட அண்மை மரணங்கள் யாவும் ஒருவகையில் மறுபிறவிக் கொள்கையை அத்தாட்சிப் படுத்தும் விதத்திலேயே அமைந்துள்ளன. எனவேதான் கீழைத்தேய மகான்கள் கூறிய கருத்துக்களை மறுபடியும் தேடிச்செல்ல வேண்டிய புதிய தேவையொன்றையும் இந்த அண்மித்த மரண அதிசயங்கள் தூண்டி விட்டுள்ளன.

உலகம் முழுவதுமே ஒரு பெரும் காந்த சக்தியால் நிறைந்திருக்கிறதென்பது மெஸ்மர் என்பவர் கண்டுரைத்த உண்மைகளில் ஒன்று. பேரண்ட வெளியில் நெருப்புப் பொறிகளை வாரியிறைத்துக் கொண்டு, கோடிக்கணக்கான சூரியன்களைத் தன்னகத்தே இணைத்து, சக்கர வடிவில் சுழன்று கொண்டிருக்கிறது பால்வெளி. ( Milkyway) இப்பால் வெளியே அண்டம் முழுவதும் பரவியிருக்கும் காந்த அணுக்களின் உற்பத்தித்தானமாகும். பால்வெளியிலிருந்து வெளியேறிவந்த அணுக்களின் ஒரேயொரு துகள்தான் நமது உயிரின் — உடம்பின் கருவாகிறது. இக்காந்த அணு அடிமூளைக்குள் அடைக்கலமானவுடன் அதுவே ஜுவன் — ஜுவாத்மா — உயிர் என்று

படிப்பகம்

www.padippakam.com

அழைக்கப்படுகிறது. கருவின் மூளையில் இந்த ஜீவ அணு புகுந்த பின்னரே மற்ற உறுப்புக்கள் ஒவ்வொன்றாக உருவாகின்றன. இதன் மூலம் மனித ஜீவனாகிய உயிருக்கும் ஒளிப் பிளம்பாகிய பால் வெளிக்கும் தொடர்புண்டென்று கண்டுபிடித்தனர். மேலும் , "எந்தெந்த மூலத் தாதுக்கள் ஒன்று சேர்ந்து உடல் உண்டாகின்றதோ அவை பிரிந்து போவதே மரணம்." என்றும் பாடிவைத்தனர். மரணத்தின் பின் காணக்கூடிய இப் பேரொளியை," **அருட்பெருஞ் சோதி , தனிப் பெருங் கருணை!"** என்றார் வள்ளலார்." **மனமே நீ எங்கிருந்து வந்தாயோ அங்கே போய்ச் சேர் !** " என்றார் தாயுமானவர்.

மனிதனும் பிரபஞ்சமும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் கோட்பாடு ஒன்றுதான். அது போலவே பிபஞ்சமும் ஒளியும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் கோட்பாடும் ஒன்றுதான். இது ஓர் அதிசயிக்கத் தக்க உண்மையாகும். ஒளியானது புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்வதில்லையென ஒருகாலத்தில் எண்ணினார்கள். அது தவறு," ஒளி வளைகிறது. அது புறப்பட்ட இடத்திற்கு வந்தும் சேர்கிறது ! " என்ற உண்மையைக் கண்டுபிடித்தவர் ஐன்ஸ்டைன் என்ற விஞ்ஞானியாகும். இவ்விதமே பிரபஞ்சமானதும் ஒரு பக்கத்தால் குடைபோல விரிவடைந்து கொண்டே செல்கிறது. அப்படியே அதற்கு எதிர்ப் பக்கமாகச் சுருக்கமடைந்தும் செல்கிறது." இருளை நோக்கி ஒளியின் விதையும், ஒளியை நோக்கி இருளின் விதையும் எதிரெதிராக அசைந்து கொண்டிருப்பதே சகல செயற்பாடுகளினதும் அடிப்படை விதி! " யென இறுதியில் விஞ்ஞானம் தீர்க்கமாக நிறுவியது. இதன்படி மனித வாழ்வு உட்பட சகல விஷயங்களுமே ஆரம்பத்தை நோக்கியே சென்று கொண்டிருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும். எனவே இருண்மல நிலையிலுள்ள வாழ்வு இறுதியாக ஒளியைக் காண்பதும் கோட்பாட்டு ரீதியாக சரியான முடிவே. இவ்வளவு விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களையும் ஒரு சிறு வேறுபாடுகூட இல்லாமல், " **அருவமும் உருவும்ஆகி , அநாதியாய் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நின்ற சோதி !** " யென நாலே வரிகளில் பாடி வைத்திருக்கிறார் கச்சியப்ப சிவாச்சாரியார். இவ் ஒளிக்குத் தமிழில் சூட்டப்பட்டுள்ள பெயர்," **கடவுள்** " என்பதாகும். இதன் கருத்தானது, (கட + உள்) என்று விரிந்து பொருள் தரும் . நீ உன்னுள் கடந்தாயானால் ஒளியைக் காண்பாய் ! என்ற அற்புதமான செய்தியால் இச்சொற்பதம் பொருள் நிரம்பித் ததும்புகிறது.

லூயிபாஸ்டர் என்னும் பிரான்சிய விஞ்ஞானி," உயிரற்ற பொருளிலிருந்துதான் வாழும் உயிர்கள் தோன்றுகின்றன! " என்ற இரசாயனக் கொள்கையால் , 19 ம் நூற்றாண்டிலேயே உலகின் கவனத்தை ஈர்த்தார். இது," ஓர் முடிவிலிருந்தே யாவும் தொடங்குகின்றன " என்னும் கருத்துக்கு வலிமைதரும் செய்தியாகும். மனிதன் மூச்சுக் காற்றினால் பிரபஞ்சத்துடன் இணைக்கப்பட்டுள்ளான். அதை நிறுத்தினால் மரணம் நிகழும்." வாழ்வதற்கும், இறப்பதற்கும் மட்டுமல்ல உடலின் மறு உருவாக்கத்திற்கான பணியையும் மனித உடலிலுள்ள காற்றுக்களே செய்து வருகின்றன ! " என்றார் திருமூலநாயனார். இதை இவரின் தேர்ந்த தத்துவக் கட்டளைகளில் அழகாகக் காணலாம். இதன்படி மனித உடலில் பத்து வகையான வாயுக்கள் தொழிற்படுகின்றன. இவை முறையே, **பிராணன்** சுவாசம்விட உதவுவது. **அபானன்** மலசலம் கழிப்பிப்பது. **வியானன்** தோளிலே நின்று பரிசங்களை அறிவிப்பது. **உதானன்** வயிற்றிலே தீயை மூட்டி உண்ட உணவை செமிக்க வைப்பது. **சமானன்** உடலில் உள்ள வாயுக்களைச் சமநிலையில்வைத்திருப்பது. **நாகன்** கொட்டாவியையும், விக்கலையும் உருவாக்குவது. **கூர்மன்** கண்களிலே நின்று இமைப்பிப்பது. **கிரிகரன்** தும்மச் செய்வது. **தேவதத்தன்** ஓடுதலும், உலாவுதலுமாகிய பணியைச் செய்விப்பது. இறுதியாகத் **தனஞ்சயன்** உயிர் உடலைவிட்டுப் போனாலும் தான் மட்டும் பிரியாமல் நின்று , உடம்பை வீங்குவித்தல், உயர்வித்தல், புளிப்பித்தல், போன்ற



படிப்பகம்

www.padippakam.com

காரியங்களைச் செய்வித்து மூன்று நாட்களின் பின்னர் கபாலத்தைப் பிளந்து ஓடிப்போவது. என்று கூறினார். தூலசரீரமானது இறப்பின் பின் ஏதோஒரு மறு ஜனனத்திற்காக வாயுக்கள் மூலம் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளு மென்ற திருமூலநாயனார் கருத்தும், ஹூயிபாஸ்டரின் கோட்பாடும் அடிப்படையில் ஒன்றுதான்.

அப்படியானால் மனிதனானவன் ஏன் இறந்து பிறத்தல் வேண்டும் ? ஒளியாக நிற்கும் சூரியனைப் போல ஏன் அவனால் நீடித்து வாழமுடியவில்லை ? என்ற ஆய்வும் மனிதரிடையே நடைபெறா மலில்லை. சூரியனின் இயக்கத்தில் இதற்கான பதில் ஒன்றும் இணைந்து கிடப்பதாகத் தெரிகிறது. ஒரு வாகனமானது பத்துக்கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்க வேண்டுமானால் அதற்குப் பதிலாக சுமார் ஒரு இலீட்டர் எரிபொருளை இழக்க நேரிடும். வாகனங்களாகட்டும், மனிதர்களாகட்டும் புவியில் ஒன்றை இழந்தே இன்னொன்றைப் பெறமுடியும். என்னும் ஒழுங்கு சார்ந்தே இயங்குகின்றன. ஆனால் சூரியன் அப்படியல்ல ; சூரியனில் ஒருவினாடியில் சுமார் 17 தொன் எடையுள்ள எரிபொருட்கள் எரிகிறது. அவ்வாறு எரிவதால் உண்டாகும் கிரியைகளால் மறுபடியும் 17.0002 தொன் எடையுள்ள எரிபொருளை அது தனக்குள்ளேயே உருவாக்கியும் கொள்கிறது. இதன் மூலம் ஒளியை வழங்கும் காரியமும் நடைபெற்றிருக்கிறது ; அதேவேளை எரிக்கப்படும் வலுப் பொருளும் மறுபடியும் உருவாக்கப் பட்டுமிருக்கிறது. இது மிக அதிசயமான தெய்வீகத் தன்மை பொருந்திய கோட்பாடாகும். இவ்விதம் தன்னைத்தானே அழித்து, தன்னைத்தானே உயிர்ப்பிக்கும் வல்லமையை மனிதர்கள் பெறும்போது மட்டுமே அவர்களும் சூரியனைப் போல நீடித்தல் சாத்தியமாகும்.

"வாழ்வின்பின் ஒரு வாழ்வு" என்னும் புத்தகமும் கடும் விமர்சனத்திற்குட் பட்டிருப்பதையும் நாம் மறுப்பதற்கில்லை." தர்க்கத்தின் உச்சியில் நின்று பார்க்கும்போது அச்சமூட்டும் வெறுமையே எஞ்சியுள்ளது. இந்த மகத்தான அச்சத்தை வெற்றி கொள்ளவே ஒருகாலத்தில் மனிதன் கடவுளை உருவாக்க வேண்டுமென எண்ணினான் ! " என்று தத்துவஞானி கிர்கோர் கூறினார். மரணம் என்பது என்றோ ஒருநாள் நடைபெறுவதல்ல ! நாம் ஒருவினாடி வாழ்ந்தோமானால் அந்த ஒரு வினாடி இழப்பிற்குள்ளேயே ஒருவினாடி மரணத்தையும் அனுபவித்து விடுகிறோம். எனவேதான் வாழ்வதும், சாவதும் ஆகிய இரண்டும் ஒரே விஷயங்கள்தான். அவை வேறுவேறானவையல்ல. உண்மையில் வாழ்வதென்பதே மரணத்தை அனுபவிப்பதுதான் என்று கூறினார் மகான் கிருஷ்ணமூர்த்தி.

" எப்படி கடவுள் உண்டென்று கூறுகின்ற ஒரு மகான் போற்றுதற்குரியவரோ ? அதுபோலவே கடவுள் இல்லையென்ற கொள்கையில் உறுதியாக உள்ள ஒருவரும் போற்றுதற்குரியவரே ! " என்ற வாதமும் அண்மைக் காலங்களில் வேகமாக வளர்ந்து வருகிறது. ஏனெனில் உண்டு என்ற பூரண நம்பிக்கையின் பெறுமானமும், இல்லையென்ற பூரண நம்பிக்கையின் பெறுமானமும் ஒன்றுதான். உண்மையில் இருசாரரையுமே இயக்கிக் கொண்டிருப்பது நம்பிக்கையென்ற ஒரு விடயமே ! " **நாயைக் கண்டால் கல்லைக் காணோம்? கல்லைக்கண்டால் நாயைக் காணோம் ?** " என்ற பழமொழி இவ் அரிய கருத்தை விளக்கவே உருவாக்கப் பட்டதாகும். சிற்பியால் கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ள நாயைக் காணும் ஒருவர் அதை நிஜமான நாயென எண்ணி அஞ்சி ஓடினால் ; அங்கே அவருக்குக் கல் தெரியாது. நாயே தெரியும். அதையே வேறொருவர் கல் என உறுதியாக நம்பினால் ; அங்கே அவருக்கு நாய் தெரியாது. கல் மட்டுமே தெரியும். கடவுள் உண்டா? இல்லையா ? என்பதற்கு இதுவே மிக இலகுவான விடையாகும். இதே நிலை சார்ந்தே



படிப்பகம்

www.padippakam.com

அணுக்கருவும் இயங்குகிறது. அங்கும் இருவிசைகளே தொழிற்படுகின்றன. ஒன்று புரோட்டன் ஆகிய ( நேர்மின் துகள் ) மற்றது எலக்ரோன் ஆகிய (எதிர்மின் துகள்) மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் அங்கும் ( + — ) என இரு விசைகள் எதிரெதிராக இயங்கும் போதே மின்ஒளி பரவுகிறது. இப்படியாகவே இறைவனும் ஒரு வழியால் அருவமானவன் (உருவமற்றவன்) மறுவழியால் கண்களால் காணும் உருவமானவன் (உருவத்திருமேனி ) " **அருவமும் உருவுமாகி** " என்னும் கந்தபுராண வரிகளை மீண்டும் நினைவுபடுத்துங்கள் மேலைப்புல விஞ்ஞானமும், பல புதிய கண்டுபிடிப்புக்களும் தமிழ்ப் பாடலொன்றுக்குள் சிறைப்பட்டுப் போவதைக் கண்டு வியப்பீர்கள்.

" வாழ்வின்பின் ஒரு வாழ்வு ?" என்ற இந்த ஆர்வமூட்டும் கட்டுரைகளில் வரும் இரண்டாயிரம் சாட்சியாளர்களும் இறந்து பின் பிழைத்துக் கொண்டவர்களாகும் ! இவர்கள் கூறிய செய்தியின் அடுத்த பக்கத்தையும் நாம் நோக்குதல் வேண்டும். இத்தனை கோடிக்கணக்கான ஆண்டுகளாக புவியில் தோன்றிய உயிரினங்கள் பிறந்தும், இறந்தும், கட்டமைவுகளை மாற்றியும், பரிணாமமடைந்தும் போராடிக் கொண்டிருப்பது ஏன் ? கோடிக்கணக்கான ஆண்டுகளாக உயிரினங்கள் புவிமீது ஏன் இருப்புக் கொண்டுள்ளன ? என்று கேட்போமானால் படைப்பியலின் அடிப்படை விதியே அதற்குள் புதைந்து கிடப்பதை அறிவோம். ஆம் ! மரணத்தின் பின் காண்பதாகக் கூறப்படும் அன்பான அப் பேரொளியை நாம் மரணத்தின் முன்புள்ள நடைமுறை வாழ்விலேயே கண்டுகொள்ள முடியும். அந்த இறுதிப் புள்ளியை நோக்கியே புவிமீதுள்ள உயிரினங்களின் ஒட்டுமொத்த வாழ்வு முழுவதுமே அசைந்து கொண்டிருக்கிறது. ஞானிகளும் மகான்களும் கூறிய **இறவாப் பேரின்பம்** என்பதும் அதுவே. அதை அடையும்வரை நாம் மறுபடியும், மறுபடியும் படைக்கப்படுகிறோம். ஆன்மீகம் கூறும் அடிப்படையும் இதுவே ! விஞ்ஞானம் கூறும் அடிப்படையும் இதுவே.



700.000 டெனிஷ் வீடுகளில் இன்று கொம்பியூட்டர் பாவனையில் உள்ளது. இது அனேகமாக எழுத்துத்தேவைக்காகவோ அல்லது கொம்பியூட்டர் விளையாட்டுக்காகவோ பாவிக்கப் படுகின்றது. அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக வீடுகளில் அதிகளவு கொம்பியூட்டரை ப ாவிக்கும் நாடாக விளங்கும் டென்மார்க்கில் இந்த ஆண்டு 1995 கடைசிக்குள் 37 சதவீதமான வீடுகளில் கொம்பியூட்டர் பாவனைக்கு வந்துவிடும். அதாவது ஏறக்குறைய 120.000 கொம்பியூட்டர் வீட்டுப்பாவனைக்காக வாங்கப்படவுள்ளதாக ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

# ஆதவனின் *பார்வையில்* சினிமா

## Witigenstein (விற்கின்ஸ்ரைன்)

அண்மையில் நான் பார்த்த நல்ல திரைப்படம் ஒன்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். அந்தப் படத்தின் பெயர் Witigenstein இது ஒரு ஆங்கிலப்படம். இதனை இயக்கியவர் Derek Jarmanஎனும் பிரித்தானியர். சென்ற ஆண்டு கொப்பனேகனில் நடைபெற்ற சர்வதேசத் திரைப்பட விழாவில் காண்பிக்கப்பட்டுப் பலரது கவனத்தையும் பெற்ற படம். இப்பொழுது வீடியோவில் விற்பனைக்கு வந்திருக்கிறது.

விற்கின்ஸ்ரைன் என்பவர் ஒரு தத்துவஞானி. அவரது வாழ்க்கை வரலாற்றையும் தத்துவங்களையும் சித்தரிக்கிறது இந்தப்படம். தத்துவஞானிகளுக்கெல்லாம் ஒரு தத்துவ ஞானி என வருணிக்கப்பட்டவர் விற்கின்ஸ்ரைன். மொழிபற்றியும், தர்க்கம்(Logic)பற்றியும் இவர் தத்துவ உலகிற்குச் செய்த பங்களிப்புகள் அளப்பரியன.

1889 ம் ஆண்டு வியன்னாவில் இவர் பிறந்தார். இவரது இயற்பெயர் Ludwig Witigenstein என்பதாகும். இவரது குடும்பம் பணக்காரக் குடும்பம். அத்துடன் மரபுரீதியான கட்டுப்பாடுகள் நிறைந்தது. இளவயதிலேயே தூயகணிதத்திலும் அளவையியலிலும் சிறந்து விளங்கிய விற்கின்ஸ்ரைன் முழுமையான அறிவையும் சுதந்திரமான அறிவையும் வேண்டிக் குடும்பத்தைத்துறந்தார். பொறியியல் பட்டதாரி ஆனார். வேகம் கூடிய ஜெட் விமானங்களின் அதிர்வுகளை எவ்வாறு கூட்டிக்குறைக்கலாம் அல்லது விமானங்களின் காற்றாடியின் அதிர்வலைகள் பற்றிய ஆராய்ச்சியில் அவர் இறங்கினார். அந்த ஆராய்ச்சி - பயனற்றது எனக்கண்டு கொண்டு உண்மையான அறிவு என்பது தத்துவக்கல்விதான் என முழுமையாகநம்பி தத்துவம் படிப்பதற்காக Cambridge பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். அங்கே இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தத்துவஞானி என்றழைக்கப்படுபவரான Bertrand Russelhரிடம் மாணவனாகச் சேர்ந்தார்.

அங்கே தனது மொழி பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினார். இவரது ஆராய்ச்சி what is the meaning of meaning அர்த்தம் என்பதின் அர்த்தம் என்ன? என்பதிலிருந்து ஆரம்பமாகியது. அக்காலத்தில் Cambridgeஇல் வாழ்ந்த புத்திஜீவிகளின்பால் வெறுப்பும் அருவெறுப்பும் அடைந்த விற்கின்ஸ்ரைன் போலி அறிவாளிகளிடமிருந்து அறிவைக் காப்பாற்ற வேண்டும் எனும் அவாவினால் Cambridge ஐ விட்டு வெகுதூரம் ஓடி NORWAY ல் ஆற்றங்கரையொன்றில் குடிசையமைத்து இயற்கையுடன் தன்னைப் பிணைத்துத் தன்னந்தனியனாகத் தனது ஆராய்ச்சியைச் செய்வதில் சிலகாலங்களைக் கழித்தார்.

பின்னர் வியன்னாவுக்கு மீண்ட இவர் முதலாம் உலகப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அப்பொழுது இத்தாலியில் பணயக் கைதியாகப் பிடிபட்டு சிலகாலம் சிறையில் இருந்தார். இந்தக்காலகட்டத்தில் இவர் தனது முதலாவது புத்தகத்தை எழுதினார். இதன் பெயர் Tractatus Logico Philosophiousஎன்பதாகும். அக்காலத்திய மொழியியல் தத்துவ ஞானிகளை இந்தநூல் ஒரு உலுக்கு உலுக்கியது.

இந்த நூலின் முக்கியத்துவத்தை உணர்ந்த Cambridge அறிவாளிகள் இவரை மீண்டும் Cambridgeக்கு அழைத்துவந்தார்கள். இங்கு அவர் நிகழ்த்திய விரிவுரைகள் உலகப்புகழ் பெற்றவை. தத்துவம் பற்றிய வரைவிலக்கணங்களும் தத்துவஞானிகள் எப்படி அறிவைக் குழப்பிக் கொள்ளுகிறார்கள் என்பதுபற்றியும் நகைச்சுவையுடன் நடைமுறை உதாரணங்கள் காட்டிய விரிவுரைகள் அவை.

இதுவரை காலமும் 'மொழி' பற்றி நிலவிவந்த கருத்துக்கள் இவர் வருகையின் பின்னர் புதிய பரிமாணம் எடுத்தன. எல்லாத் தத்துவஞானிகள் வாயிலும் 'விற்கின்ஸ்ரைன்' என்ற பெயர் அடிபடலாயிற்று.



படிப்பகம்

www.padippakam.com

இவரது தத்துவத்தைப் புரிந்துகொள்ளுவது பலருக்குச் சிரமமாகவே இருந்தது. தான் சொல்லுவது ஒருவருக்கும் புரியவில்லையே என்ற கவலை இவரை அரித்துக்கொண்டிருந்தது. இவரை எல்லாரும் 'புரியாதபுதிர்' போலப் பார்க்கத் தொடங்கினர். இதனால் வேதனையடைந்த இவர் அயர்லாந்துக்குச் சென்றார். அங்கே அவரது இரண்டாவது நூலான Philosophical- Investications ஐ எழுதி முடித்தார். அப்பொழுது இவரைப் புற்றுநோய் தாக்கத் தொடங்கியது. இவர் மீண்டும் Cambridgeக்கு வந்து 1951ல் தன் மாணவர்கள் புடைசூழ இறந்து போனார். அவர் இறக்கும் பொழுது சொன்ன இறுதி வரிகள்:

'என் நண்பர்களுக்குச் சொல்லுங்கள்
நான் அழகான வாழ்க்கையை வாழ்ந்தேன் என்று' என்பதாகும்.

"ஒரு சொல்லின் கருத்து என்பது அந்தச் சொல்லின் பாவனையிலும் பயன்பாட்டிலுமே தங்கியிருக்கிறது" என்பது விற்கின்ஸ்ரைனின் மொழி பற்றிய அறிவில் மகத்தான பங்களிப்பாகும். விற்கின்ஸ்ரைனையும் அவரது தத்துவங்களையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் இந்த உலகில் மிகச்சிலரே. இந்தச் சிலருள் எமது நாட்டவரான கலாநிதி S.V.காசிநாதனும் ஒருவர் என்பதில் தமிழர்கள் யாவரும் பெருமையடையலாம். (அவரிடம் கல்வி கற்ற மாணவர்களில் நானும் ஒருவன் என்பதைப் பெரும்பேறாகக் கருதுகிறேன்.)

விற்கின்ஸ்ரைன் 3 புத்தகங்கள்தான் எழுதினார். ஆனால் அவரைப்பற்றியும் அவரது நூல்களைப்பற்றியும் இதுவரை 30,000க்கும் அதிகமான நூல்கள் வந்துவிட்டன என ஒரு கணிப்பீடு சொல்கிறது.
இனி படத்திற்கு வருவோம்.

சினிமாவை 2 பிரிவாக்கலாம். ஒன்று விவரண(Documentry) சினிமா. மற்றயது கதைச்சினிமா. நவீன சினிமாக்கள் இப்பொழுது இரண்டும் கலந்தே வருகின்றன. இவை இரண்டும் இல்லாமலும் சினிமாவை எடுக்கமுடியும் என்பதற்கு இந்தப்படம் ஒரு நல்ல உதாரணம். தத்துவஞானி ஒருவரின் வாழ்க்கை வரலாறு என வெறுமனே இதனை ஒதுக்கிவிட முடியவில்லை. அவ்வளவு தூரத்திற்கு சினிமாவின் சகல உத்திமுறைகளையும் கையாண்டிருக்கிறார் இயக்குனர். படம் ஆரம்பிக்கையில் ஒரு சிறுவன் மிக அண்மையில் தோன்றி நான்தான் தத்துவஞானி விற்கின்ஸ்ரைன் என்று சொல்லுவான். அட சிறுவன் எப்படி தத்துவஞானி என்று சொல்கிறான் என்ற வியப்புடனேயே படம் விறுவிறுப்படைகிறது. இந்த வியப்புக்கு சில நிமிடங்களில் விடையும் கிடைத்துவிடுகிறது. அதாவது விற்கின்ஸ்ரைன் என்ற தத்துவஞானியின் "மனம்" (self) தான் இப்படிக் குறியீடாகக் காட்டப்படுகின்றது.

செவ்வாய்க் கிரகத்திலிருந்து ஒரு பச்சை நிற உருவம் இந்தச் சிறுவன் முன் திடீரெனத் தோன்றும். இந்த உருவத்தை விற்கின்ஸ்ரைனின் சிந்தனைக்குக் குறியீடாகப் பாவிக்கிறார் இயக்குநர். சிறுவனுக்கும் பச்சை உருவத்துக்கும் நடக்கும் சம்பாசணை— அது மனதுக்கும் அறிவுக்கும் நடக்கும் சம்பாசணையாகச் சித்தரிக்கப்படுகின்றது. இந்தச் சம்பாசணைகள் மிகவும் சுவாரசியமாய் இருக்கின்றன.உதாரணமாக:
செவ்வாயிலிருந்து வந்த

உருவம்: நீ யார்?
சிறுவன்: நான் தத்துவஞானி
உருவம்: தத்துவஞானியின் கால்களில் எத்தனை விரல்கள்?
சிறுவன்: பத்து

தரமான சினிமாக்களைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் கொண்டோர் இந்தப்படத்தை ஒரு தடவை பார்க்கலாம். இந்தப் படத்தின் ஒறிஜினல் கொப்பி என்னிடம் உண்டு. தேவையானோர் தொடர்பு கொள்ளவும்.

மீண்டும் அடுத்தமாதம்
இவண்
க.ஆதவன்



படிப்பகம்

www.padippakam.com

# நட்சத்திரமும் நடிகையும்

(தொடர்)

**பிரபல சிங்களநடிகை அனோஜா வீரசிங்கவின் பேட்டி**

*சிங்களத்தில் இருந்து ஆங்கிலம்:* சுனிலா அபயசேகரா

*தமிழில்:* ஆதவனும், மல்லீஸ்வரியும்

*கேள்வி: ஒரு நடிகையாக இருப்பதற்கும் ஒரு நட்சத்திரமாக இருப்பதற்கும் முரண்பாட்டைக் காண்கிறீர்களா?*

பதில்:
நான் அதிஸ்டம் செய்தவள். இரண்டாகவும் இருக்கிறேன்.இரண்டையும் எப்படி ஈடுசெய்கிறேன் என்பது எனக்குவடிவாகத் தெரியவில்லை. எனது பின்னணி ஒரு காரணமாக இருக்கலாம். நான் வளர்ந்தது மிகவும் பின்தங்கிய கிராமத்தில். பதுளையில் பிறந்து மொனராக்கலையில் உள்ள ஒரு பின்தங்கிய கிராமத்தில் வளர்ந்தேன். இன்றும் எனது குடும்பத்தாரின் வீட்டுக்கு மின்சாரவசதி கிடையாது. நான் கொழும்புக்கு க.பொ.த (உ.த) பரீட்சை எழுதுவதற்காக ஒரேயொருதடவையே வந்திருக்கிறேன். நான் கிராமங்களில் வளர்க்கப் பட்டதால் கிராமியமக்களின் உணர்வுகளையும் வாழ்க்கை முறைகளையும் என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது.

இலங்கையின் பெரும்பாலான கலைப்படங்கள் கிராமம் சார்ந்தவை. மிகச்சொற்ப படங்களே நகரம் சார்ந்தவை. இதனால் கலைப்படங்களில் வரும் கிராமியப் பாத்திரங்களை என்னால் செம்மையாக நடிக்கமுடிகின்றது. இன்றும் நான் பெருமையாகச் சொல்வேன். ஒருகிலோ அரிசியை அரைமணித்தியாலத்தில் உரலில் இடித்து மாவாக்கித்தருவேன். இது ஒன்றும் பெரியவிஷயமல்ல. ஆனால் வியாபாரப் படங்கள் நடிக்கத்தொடங்கிய பின்தான் கஷ்டங்களை நான் கண்டுகொண்டேன். உதாரணமாக எனக்கு நடனம் தெரிந்திருக்கவில்லை. எமது கிராமத்தில் நாங்கள் படமே பார்க்கவில்லை. படம் பார்ப்பதாயின் 4மைல்கள் நடந்து செல்ல வேண்டும். என்னால் நினைவு கூரமுடிகிறது. சிங்களத்தின் முதல் சினிமாஸ்கோப் படமாகிய டி.பி.நிஹால்சிங்கவின் 'வெளிகதர என்ற படத்தை 1971இல் பார்க்கப் போனது. அப்போழுது எங்கள் தியேட்டரில் சினிமாஸ் கோப்புக்குரிய லென்ஸ் இருக்கவில்லை. உருவங்கள் யாவும் உயரமாய், ஒல்லியாய், நீண்டும் தெரிந்தன. நிஹால்சிங்கவின் இயக்கத்தில் படம் நடிப்பேன் என நான் கனவிலும் நினைக்கவில்லை.

வியாபாரப்படங்களுக்கு நான் வந்த பிற்பாடு அதன் தேவைகட்காக படிக்க ஆரம்பித்தேன். உதாரணமாக முறைப்படி பரதநாட்டியம் அரங்கேற்றம்வரை படித்தேன். கராத்தே கற்றுக்கொண்டு 'புளூ பெல்ட்' வாங்கினேன். காரோட்ட, மோட்டார் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டேன். இப்படித்தான் சவாலை சமாளித்தேன்.

*கேள்வி: எப்படி நீங்கள் திரைப்படத் தொழிலுக்குள் நுழைந்தீர்கள்?*

பதில்:
அது ஒரு தற்செயல். நான் நடிகையாவேன் என்று ஒருபோதும் நினைக்கவில்லை. ஆனால் நான் படம் பார்ப்பதையும்நட்சத்திரங்களையும் ரசித்தேன். புகழ்பெற்ற சிங்கள நட்சத்திரமாகிய மாலினி பொன்சேகாவின் படத்தைப் பார்த்தால் அவர் சிரிப்பதைப்போல..நடப்பதுபோல.. அவர் செய்வதைப்போல நாட்கணக்காய் செய்து பார்ப்பேன். இன்றுவரை நான் அவரைப் பார்த்து வியந்து கொண்டிருக்கிறேன். ஆனால் நான் டொக்டராக வரத்தான் விரும்பினேன். எனது பெற்றோர்களின் விருப்பமும் அதுவே. எனது தந்தையார் ஒரு நாடகநடிகர். தனது பெண்பிள்ளைகள் நடிப்பதற்கு அவர் எதிரானவர். திரைப்படத்தில் எனக்கு அழைப்பு வந்தபோது அவர் எதிர்த்தார். பின்னர் எனக்கு விவாகமாகி கொழும்பில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஒரு கிளார்க்காக வேலை செய்து கொண்டிருந்தேன். அங்கு வேலை செய்த தோழியின் தந்தையார் 1980ம் ஆண்டு யசபாலித்த நாணயக்காராவின் 'டக்டிக்டுக்' என்ற படத்தின் தயாரிப்பாளராவார். நானும் எனதுதோழியும் சூட்டிங் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. அன்று ஒரு துணை நடிகை வரவில்லை. அன்றைய தினம் சூட்டிங்கை கான்சல் செய்தால் பெருந்தொகையான பணம் நட்டம். தோழியும்,அவர் தந்தையும் வற்புறுத்தியதனால் நான் அத்துணை நடிகையின் பாத்திரத்தை ஏற்றுநடிக்க சம்மதித்தேன். நான் ஒரு நடைபாதையில் நடந்து வரவேண்டும். அதுவே எனது நடிப்பு. 30 செக்கன்கள் தான் திரையில் தெரியும். இதுதான் எனது முதல் திரையுலகப் பிரவேசம். பின்னர் யசபாலித நாணயக்காரா தனது புதியபடமான "மொனரதன்ன" என்ற படத்துக்கு புதிய நாயகியைத் தேடி என்னைத் தெரிவு செய்தார். எனது கணவரும் நான் இப் படத்தில் நடிக்க இசைந்தார். ஏனெனில் இப் படம் நாடகமாக பல மாதங்களாக இலங்கை வானொலியில் இடம்பெற்று பலராலும் புகழப் பட்டமையாலே. இப்படத்தில் நான் "சுரஞ்ஜி" என்ற பாத்திரமேற்று நடித்தேன். இப்படம் வெளியாகும் முன்னராகவே எனக்கு மேலும் 10 படங்களுக்கு அழைப்பு வந்தது.

-வளரும்-



படிப்பகம்

www.padippakam.com



# நான் விழித்திருந்த ஓர் இரவு

ஒரு மனிதனுடைய வாழ்கையில் எத்தனை இரவுபகல்கள் வந்து போகின்றன, அப்படி எத்தனை இரவுபகல்கள் வந்தாலும் ஒன்று இரண்டு என்றும் மறக்கமுடியாமல் உள்ளது. அப்படிப்பட்ட ஒரு இரவுதான் நான் விழித்திருந்த இரவு.

கிட்டத்தட்ட 8வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். அப்போது எனக்கு 7வயது இருக்கும். நானும் எனது அம்மாவும் அண்ணர் ஒருவரும் அக்காகுடும்பத்துடன் டென்மார்கில் வசித்து வந்தோம். எனது தந்தை எனக்கு 2½வயது இருக்கும்போதே பிரான்ஸ் போய்விட்டார். எனக்கு எனது தந்தையை 7வயதுவரை தெரியாது. ஒரு சில போட்டோக்களில் பார்த்ததுதான். முதல் முதலில் டென்மார்க்கில் அவரை சந்திக்கக் போகும் அந்தக்காலை நேரத்துக்காக இரவு முழுக்க விழித்து இருக்கவேண்டியது ஆகி விட்டது.

ஆகா அந்த இரவு தான் எத்தனை இனிமை யானது. அத்துடன் கொஞ்சம் பயங்கரமாக கழிந்தது. காரணம் டென்மார்க் அரசாங்கத் திடம் எனது தந்தையை கூப்பிட்டு தரும்படி நாங்கள் கூற அவர்கள் அதற்கு எடுத்த காலம் மிகவும் நீண்டு கொண்டேபோய் விட்டது. பக்கத்தில் இருந்தும் தனது மனைவி பிள்ளைகளை பார்க்கமுடியாமல் உள்ளதை நினைத்து அப்பா மிகவும் வேதனைபட்டார், அதன் காரணமாக ஏஜன்சி ஒருவர்மூலம் டென்மார்க் வருவதற்கு ஏற்பாடுசெய்து அன்று வெளிக்கிட்டும் விட்டார்.

அவர் வந்து சேரும்மட்டும் வீட்டில் எல்லோரும் கடவுளை வேண்டிக்கொண்டு இருந்தார்கள். முதலில் அப்பா வருவதை எங்களிடம் யாரும் சொல்லவில்லை காரணம் அவருடைய பயணம் தடைப்பட்டுவிட்டால் எங்களால் அந்த ஏமாற்றத்தை தாங்க முடியாது என்று. ஆனால் எப்படியோ நான் அதை அறிந்து கொண்டு விட்டேன், அப்பாவை பார்க்கப்போகும் சந்தோசத்தில் சாப்பாடும் இல்லை, உறக்கமும் இல்லை, சொல்லத் தெரியாத சந்தோசம். எனக்கு அக்கா அடிக்கடிவந்து சொல்லுவா நீ போய் தூங்கடி, அப்பா வர நேரம் இருக்கு; விடியத்தான் வருவினம் என்று. என்னால் முடியவில்லை.. அம்மாவுக்கு பக்கத்தில் கோலுக்குள் இருக்கும் ஒரு சோபாவில் சரிந்தபடியே இருந்தோம். என்னுடைய சின்ன வயதிலும் அம்மாவின் கவலையையும் ஏக்கத்தையும் புரிந்துகொள்ளமுடிந்தது. நான் பார்க்கும் போதெல்லாம் மணியை பார்த்துக்கொண்டே யிருப்பா. தொலைபேசி மணி அடித்தால் ஆவலுடன் அதை எடுப்பதும், ஏமாற்றம் அடைவதுமாக அந்த இரவு கழிந்தது. காரணம் அப்பா டென்மார்க்குக்குள் வந்து விட்டால் தொலைபேசி எடுப்பதாக சொல்லி இருந்தார்.

கடைசியில் காலை 5.30மணியளவில் தொலை பேசி அடித்தது. அப்பாவைக் கூட்டி வந்தவர் தான். தாங்கள் ஒரு இடத்தில் நிற்பதாகவும் எங்களை வந்து அவரை கூட்டிப்போகும் படியும் கூறினார். அப்பொழுது கூட அப்பா வுடன் கதைக்க முடியவில்லை. பின்பு அப்பா வரப்போகும் சந்தோசத்தில் அண்ணனும் நானும் யார் முதலில் குளித்து வெளிக்கிடுவது என்று சண்டை பிடித்து கடைசியில் அண்ணர் தான் வெண்டார். அண்ணர் குளித்து முடிந்தவுடன் நான் குளிக்க போனேன், ஆனால் ஒழுங்காய் குளிக்கமுடிய வில்லை. காரணம் என் அண்ணர் அடிக்கடி வந்து என்னை ஏமாற்றியதுதான். அப்பா வந்துவிட்டார் அந்தா கார் வருகுது என்று.

அம்மா சமையலில் ஈடுபட்டு விட்டார். ஒருத்தருக்கும் கால் நிலத்தில் இல்லை, ஏதோ ஆகாயத்தில் பறப்பது போல இருந்தது. அப்பாவுக்கும் அப்படித்தான் இருக்கும் என்று அடிக்கடி என்மனது சொல்லியது. கடைசியில் எல்லோரும் வாசலில் காத்துக் கொண்டு நிற்க 7.30 மணியளவில் எனது தந்தையை ஏற்றிக்கொண்டு அந்த மஞ்சள்கலர் கார் வந்துகொண்டு இருந்தது. அப்பாடி என்ன சந்தோசம் என்னால் மறக்கவேமுடியவில்லை. அப்பா என்னை ஓடிவந்து கட்டி கொஞ்சி தூக்கினார். அன்றில் இருந்து இன்றுவரை எனது தந்தை என்னைவிட்டு பிரியவில்லை. விழித்து இருந்த இரவு மனதை விட்டு போகவில்லை. அன்றைய இரவு எனது வாழ்கையில் மறக்க முடியாத ஒன்றாகும்.

செல்வி. தி. சி. வாணி



படிப்பகம்

www.padippakam.com

# தோப்புக்கரணங்கள்

முல்லையூரான்

குறுநாவல் - தொடர்

(4)



"டனிஷா" டென்மார்க்கில் பிறந்துவளர்ந்தவள்.
வயது: 16
தனது குடும்பத்துடன் டென்மார்க்கைவிட்டு அவள் மீண்டும் ஈழத்திற்கு புலம்பெயர்கிறாள்.
அங்கு அவள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றிக்கூறும் ஒரு குறுநாவல் தொடர்.

வெயிலில் காய்ந்துபோய்க்கிடக்கும் நந்திக்கடலைப் பார்த்தவாறு டனிஷா இருக்கிறாள். சேற்றினுள் கால்புதைத்தபடி நின்ற ஒரு கொக்கு கடினப்பட்டு சிறகைகளை அடித்துக்கொண்டு எழுந்து வடதிசைநோக்கிப்பறந்தது. தூக்கமுடியாத மனப்பாரங்களுடன் டனிஷாவின் நினைவுகள் தான் பிரிந்துவந்த தனது டென்மார்க் நாட்டைநோக்கி நகர்ந்தது.

அது ஒரு கிறிஸ்மஸ்காலம். நாடு வெண்பனிபோர்த்திமூடி குளிரால் விறைத்துக்கிடக்கும் காலம். டனிஷா நடந்துகொண்டிருந்தாள்.குளிருக்கான தடித்தும் பாதங்களை உயர்ந்து மூடிக்கொண்டுள்ள சப்பாத்து, தடித்த கறுப்பு ஓவகோர்ட், கறுத்த தலைமுடியை தழுவிக்கொண்டு கழுத்தை சுற்றியுள்ள வெள்ளைநிற மப்ளர்,அவள் அணிந்துள்ள வெண்ணிறக் கையுறைகளுக்கிடையே ஒரு வண்ணக்கடதாசியால் சுற்றப்பட்டுள்ள ஒரு பரிசுப் பார்சல்.அது அழகிய சிகப்புநிற றிபனால் சுற்றிக்கட்டப்பட்டிருந்தது.

டனிஷாவின் பாடசாலை சகமாணவன் கென்றிக் வீட்டைநோக்கியே அவள் நடந்துகொண்டிருக்கிறாள்.கிட்டத்தட்ட 6-7 வருட வகுப்புச்சிநேகிதம்.அந்தவருட கிறிஸ்மஸ் விருந்திற்கு கென்றிக்கினால் டனிஷாவும் அழைக்கப்பட்டிருந்தாள்.குடும்பத்தினர் மட்டும் ஒன்றிணைந்து கொண்டாடும் இப்பண்டிகை நாளில் தானும் அழைக்கப்பட்டதில் டனிஷாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.கென்றிக்கினுடைய வீட்டுவாசலில் நின்றாள் டனிஷா.

குளிர்போல வெட்கம் மனதைப்பிடித்தது.கதவின் அழைப்புமணியை அழுத்தினாள் டனிஷா. கதவு, சாரளக்கண்ணாடிகள் எல்லாம் சிகப்பு வெள்ளை வர்ணங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.வீட்டோரம் வெண்பனித்துகள்களை அள்ளி ஏந்திக்கொண்டு நிற்கும் அந்த இலையில்லாத மரத்திலும் ஒளிவிளக்குகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன.அழைப்புமணியை இன்னொருதரம் அழுத்தினாள் அவள்.திறக்கப்பட்ட கதவினிடை கென்றிக் சிரித்தான்.வீட்டு முகட்டைத்தொடும் உயரம்.சிவந்தமேனி.மேல் வாரிவிடப்பட்ட தங்கமுடித்தலை.நிமிர்ந்த



படிப்பகம்

www.padippakam.com

அழகிய மூக்கு.எடுப்பான கறுப்புநிற ஆடையுடன் நடுவில் கட்டிய சிகப்புநிற ரையுமாமாக அவன் அழகாக இருந்தான்.

கைகள் குலுக்கிக்கொண்டன. கண்கள் சிரித்துக்கொண்டன. டனிஷாவின் கோர்ட்டை அவள்மீது உரசிக்கொள்ளாமல் களற்ற உதவி அதற்கான இடத்தில் தொங்கவிட்டான் கென்றிக். டனிஷா தனது காலணிகளைக்களற்றி வீட்டினுள் பஞ்சுநிற காலணிகளை அணிந்துகொண்டாள்.வரவேற்பறையில் விருந்தினர்கள் கதைப்பது கேட்டது.முன் நடுவத்தைதாண்டி நடந்து அன்னம்வேகும் சமையல்அறை வாசனையையும் தாண்டி விருந்தினர் மண்டபத்தினுள் வந்தனர் இருவரும்.அந்த மாடத்தின் நடுவில் அலங்கரிக்கப்பட்டிருந்த கிறிஸ்மஸ் மரமும்; அது சிகப்பு வெள்ளை டனிஸ் கொடிகளாலும், கிறிஸ்மஸ்தாத்தா போன்ற உருவங்களினாலும் இதயவடிவிலமைந்த ஒளிவிளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டு அழகாக இருந்தது.டனிஷா தான் கொண்டுசென்றிருந்த பரிசுப்பார்சலை அலங்கரிக்கப்பட்டிருந்த கிறிஸ் மஸ்மரத்தின்கீழ் குவிந்திருந்த பல பார்சல்களோடு வைத்துவிட்டு நிமிர்ந்தாள்.கென்றிக்கின் தகப்ப னார் கைகுலுக்கிக்கொண்டே நல்வரவுகூறிக்கொள்ள தொடர்ந்து வந்திருந்த விருந்தினர்களுடன் அறிமுகம்செய்து கைகுலுக்கிக்கொண்டாள் டனிஷா.

கென்றிக்கினுடைய பெற்றோர்களும், அவர்களுடைய பெற்றோர்களும், அவர்களின் இரத்தஉறவுச் சகோதரர்களுமே விருந்துக்கு வந்திருந்தனர்.வெவ்வேறு தூரஇடங்களில் அதிக தொடர்புகளற்று வாழும் இவர்கள் வருடத்திற்கு ஒருமுறை கொண்டாடப்படும் இந்த கிறிஸ்மஸ் பண்டிகை நாள் விருந்தில் கலந்து கொள்வதே வழக்கம்.

வந்திருந்த விருந்தினர்கள் தன்னையே ஆழமாகப்பார்ப்பதுபோன்ற ஒருஉணர்வுள் இருந்தாள் டனிஷா.முதலில் எல்லோரும் கேக்வகைகளுடன் கோப்பி அருந்திமுடித்து பியர் மதுஅருந்தத் தொடங்கினர்.ஒருசோபாவில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த டனிஷாவும் கென்றிக்கும் எழுந்து கென்றிக்கினுடைய தனி அறையுள் நுழைந்தனர்.முதன்முறையாக ஒரு இளைஞனின் தனி அறையுள் நுளைவது அவளுக்கு சற்று கூச்சஉணர்வாகஇருந்தாலும் கென்றிக்கைப்பின்தொடர் ந்து சென்றாள் டனிஷா. கச்சிதமான அறை அது அழகாக இருந்தது.இருவரும் சோபாவில் அமர்ந்துகொண்டனர்.சுவரில் மாட்டப்பட்டிருந்த படங்களில் அவளின் விழிகள் பதிந்தன.

முதலில் அமரிக்கநாட்டு பாடகி ஒருத்தியின் அரைநிர்வாணப்படம்.அடுத்தது ஒரு மொடேன்ஆட். அடுத்தது கடலில் நிற்கும் ஒரு ஓடம். அடுத்தது ஒரு டனிஸ்தம்பதிகள் கைகோர்த்தவாறு கடற்கரையில் உலாச்செல்வதும் அவர்களின்பின்னால் ஒரு நாய் பின்தொடர்வதுபோன்ற படம். டனிஷா ஆர்வத்துடன் தனது படங்களைப் பார்ப்பதை ஆவலுடன் கென்றிக் பார்த்துக்கொண்டிருந்தான்.

அடுத்தது ஒரு கிறுக்கல்சித்திரம்; அதில் ஒரு ஆணும் பெண்ணும் இணைந்திருந்தனர்.

இப்படியே ஒவ்வொரு படமாக பார்த்துக்கொண்டுவந்த டனிஷாவின் கண்கள் அடுத்தபடத்தில் தரித்துநின்றது. அது அவளின் முழுஉருவப்படம்.அதிர்ச்சியோடு அவனிடம் திரும்பினாள் டனிஷா. மௌனம் அறையில் நடந்தது.அவளின் முகத்தின் முன்னால் கட்டித்தொங்கவிடப்பட்டருந்த Mistetten எனப்படும் அந்த வாசமலரை அவள் பார்த்துக்கொள்வதற்கு முன்னதாகவே கென்றிக்கின் சிவந்த உதடுகள் டனிஷாவின் உதட்டுடன் இறுகிக்கொண்டது.சப்தமில்லாத இரவுநேரமின்னலென முகம்ஒளிர்ந்தாள் டனிஷா.அந்த மலரின் நடுவில் சந்தித்துக்கொள்ளுகின்ற ஆணும் பெண்ணும் முத்தமிட்டுக்கொள்ளலாம் என்பது டனிஸ்காரர்களின் விதிமுறை என்பதை டனிஷாவும் அறிந்திருந் தாள்.கண்களை கசக்கியபடி நிமிர்ந்தாள் டனிஷா.வடதிசைநோக்கி சிறகெடுத்த அந்த வெள்ளைக் கொக்கு மீண்டும் பறந்துவந்து அந்த நந்திக்கடல்சேற்றில் இறங்கிக்கொண்டது.அவள் எழுந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

## அகதி

தமயந்தி

முள்ளந்தண்டு
வலிக்கின்றது.

துயர் சுமந்த உடலோனாய்
அடைந்து வந்து
மனித
அபிமானத்தின் பெயரால்
குளிரும் சுமந்தபடி
நகர்கிறது வாழ்வு.

நடுங்கும் விரலிடுக்கில்
பவுத்திரத்துக்குப் பாத்திரமான
பச்சைப் புத்தகம்.

வெள்ளையன் பழக்கடையில்
தொலைகிறது.
மஞ்சள் முகத்தோடொரு
மண்டறின்

கைங்கரியம் காட்டியது
கலப்படமற்ற மறவனாம்.

குளிர் சுமந்த இருப்பு
நடுங்குகிறது.
மனித அபிமானம்
மங்கிச் சரிகின்றது.

வழமையான
தெருவோரத்து
வெள்ளைப் புன்னகைகள்
கொடுப்பிடையே
முடங்கி விடுகின்றன.

கூசுகிறது மேனி
குளிரும் தூசாக.

பனி நனைந்த
ஈர நிலத்தைத் தேடி
தாழ்கிறது தலை.

தெருவோரத்து
கறுப்புப் பாடகனொருவன்
சம்பாமேளம் இசைத்தபடி
பாடுகின்றான் தனது
துன்பியலை.
வேண்டுமென்கிறான்
மீண்டும் தன்னிடம்
தனது சூரியன்.
எனது சூரியனை
யாரிடத்தில்
நான் சென்று யாசிப்பேன்
சூர்ய புத்திரர்களிங்கே
தானமாய் தமது
மானத்தை அள்ளியிடுகையில்.

பருவமடையாத வெய்யிலின்
சிறு புன்னகையில்
மெல்ல மெல்லக் கரையும்
தெரு கவிந்த பனிப்பாளம்.

## ஏற்பாரா.........?

அழகான, முள் முருங்கைப் பூவும்
ஆவரசம், பூவரசம் பூவும்
முல்லை, மல்லி, றோசாவோடு
முட்டி மோதிக் கொண்டனவாம்.
பூக்கடை வாசலொன்றில்— தாமும்
பூமாலை தனில் சேர....!
ஏற்பானா, கடைக்காரன்?
சேர்ப்பானா மாலைதனில்?

தலையிலிருக்கும் தன் முடிக்கு
தண்ணி, எண்ணை தனைத் தடவி
பல பணத்தைத் தான் கொடுத்து
பக்குவமாய் தான் வளர்ப்போர்
தலையுதிர்ந்த தன் முடியைத் தானும்
தனதென்று, சொந்தமென்று ஏற்பாரோ?
மனித இனத்தாலே ஒன்றானாலும்— பிறந்த
இடத்தாலே வேறானால்!

வீட்டுப்பசு என்றாலும் தன்
விளைந்த பயிர்தனை மேய்ந்தால்
ஏற்பானா கமக்காரன்?— உடன்
எழுந்து சென்று கலைக்கானா?
காகத்தின் கூடதனில் குயில்
களவாக முட்டைதனை இட்டதனால்
குயில்குஞ்சு காகமாய் மாறிடுமா? காகம்
தன் பறவையினம் என்று பாதுகாத்து
வளர்த்திடுமா?

தன்குட்டி ஆனாலும் பிடியைத்
தான் தவற விட்டு விட்டால்— சேரா
மந்தியினம்! வந்துதித்த மானிடமே!
சிந்தியுங்கள் செயற்படுங்கள்.....!

வேலணையூர் பொன்னண்ணா



படிப்பகம்

www.padippakam.com

## காகம்

*முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்*
*எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.*

*– ஒரு தாய்*

"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 5 – வைகாசி. 95
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12

விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )–200 டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 U$
கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16- 18
Postboks 255
3400 Hillerød Denmark
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 73 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
படைப்பாளிகள்தொடர்பு: திரு. ரவி.......TlF: 86 40 38 05
வாசகர்கள் தொடர்பு: திரு. செல்வன்........TlF:86 64 51 98
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி
அட்டைப்படம் **ஓவியர் பாலா**

# காகம் இதழ்
# ஆறு..............................
# அது
# சிறுகதைச்சிறப்பிதழ்..............

அடுத்த இதழ் சிறுகதைச்சிறப்பிதழாக வெளிவருகிறது.
பல சிறுகதைகள் பரிசீலனையில் உள்ளன.
பல எழுத்தாளர்களுக்கும் இடமளிக்கக்கூடிய வகையில் சிறுகதைகள் காகத்தின் 2–3 பக்கங்களுக்கேற்றவாறு எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன்
தோப்புக்கரணங்கள் குறுநாவல் தொடர் சிறுகதைவடிவில் அமையும்.
மற்றும் மனதோடு பேசுதல்
கவிதைத்தொடரும்மலர்தல் வாடல் தெரிதல்அனுபவமும்
சிறுகதைவடிவில்
அமையும்............... காகம்...............................

**படைப்பாளிகள் கவனத்திற்கு..........**

**தங்கள் படைப்புக்களை தெளிவாகவும், தாளின் இரண்டு பக்கங்களிலும் எழுதுவதை தவிர்த்தும் எழுதி அனுப்புங்கள். கிறுக்கல்கள், வெட்டுகளையும் கூடியவரை தவிருங்கள்.**

**நன்றி!**

சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே முழுப்பொறுப்பாளிகளாவர்.காகத்தின் எண்ணங்களை படைப்பாளிகள் பிரதிபலிக்கவேண்டுமென்பதில்லை.
..........................காகம்.........................

உங்கள் படைப்புக்கள், அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள்; எல்லோரும் வளர...காகம்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

Til: Chanchive
Danmarksgade 10
7500 Holstebro

"Postbesørget blad, (0900 KHC) " -51033

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்